268

# தென்மொழி வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

SCRUTINY OFFICER
18 NOV 1961
INFORMATION AND PUBL
18 NOV 1961



MADRAS RECORD OFFICE
MADRAS

TB
031(5)
N60.
146926.

ன் கம்பெனி

மதராஸ்.4.

268
4-61

# தென்மொழி வாசகம்

ஐந்தாம் வகுப்பிற்கு

(புதிய பாடத்திட்டப்படி)

SCRUTINY OFFICER
18 NOV 1961
PUBLIC INFORMATION AND PUBLICITY DEPARTMENT

DIRECTOR OF INFORMATION AND PUBLICITY
18 NOV 1961

வித்வான், அ. சாம்பசிவ ரெட்டியார்
பதிப்பித்தது

MADRAS RECORD OFFICE
MADRAS

(Printed in 24 lbs. D/cr. Printing)

எஸ். வாஸன் கம்பெனி,
மயிலாப்பூர் :: மதராஸ் - 4.

பதிவு செய்தது] 1960 [விலை. 80 ந. பை.

முதற் பதிப்பு—1959
இரண்டாம் பதிப்பு—1960

Approved by the Madras Text Book Committee
for class use vide Fort St. George Gazette
dated 18-5-1960-page 11.

146926
600 008.

Printed at Parker Press, Madras - 1.

## முன்னுரை

சென்னை அரசாங்கத்தார் 1957 டிசம்பர் மாதத்தில் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்திற் கேற்ப இப்புத்தகம் எழுதப்பட்டுளது.

உரைநடைப் பாடங்கட்குக் கீழ் முக்கியமான வினக்களும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணக்கர்கள் பயிற்சிகளைச் செய்து பழகுதல் வேண்டும். இவ்வகுப்பிற்குரிய இலக்கணங்களும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன ; நிறுத்துக்குறிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்ருல் இப்புத்தகம் மாணக்கருக்கு மிக்க பயன் அளிப்பதாகும்.

இப்புத்தகத்தைப் பாடசாலைத் தலைவர்களும் ஆசிரியர்களும் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

ஆசிரியன்.

# உள்ளுறை

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிற்றூர்ச் சீர்திருத்தம் | 1 |
| 2. | ஜவஹர்லால் நேரு | 7 |
| 3. | பால் பண்ணை | 14 |
| 4. | கன்னன் கொடை | 18 |
| 5. | தொற்று நோய் | 25 |
| 6. | அவ்வையார் | 30 |
| 7. | கூட்டுறவுச் சங்கம் | 35 |
| 8. | குருவும் மாணுக்கரும் | 41 |
| 9. | பனை | 46 |
| 10. | நகரவாழ்க்கையும் நாட்டு வாழ்க்கையும் (உரையாடல்) | 50 |
| 11. | நட்பின் பயன் | 54 |
| 12. | பொங்கல் | 60 |
| 13. | உயிர்ச்சத்து | 64 |
| 14. | அரசனும் சிறுவனும் | 70 |
| 15. | நான் கண்ட காட்சி | 76 |
| 16. | செஞ்சிலுவைக் கழகம் | 81 |
| 17. | கடிதங்கள் | 86 |
| 18. | செங்கோலரசன் | 91 |
| 19. | தாமஸ் ஆல்வா எடிசன் | 96 |
| 20. | வீரபாண்டியக் கட்டபொம்மு (நாடகம்) | 101 |
| | செய்யுள் | 107 |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது; இந்தியக்கடல் அலைகளால் ஜபிக்கப் படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன ; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

ஐந்தாம் புத்தகம்

# 1. சிற்றூர்ச் சீர்திருத்தம்

நமது நாட்டில் பெரும்பாலோர் சிற்றூர்களில் குடியிருக்கிறார்கள். ஆதலின், அங்கு உள்ள குறைகளைப் போக்கி, அவ்வூர்களை உயர்நிலைப்படுத்துவதற்கு உரியவழிகளை இங்கு ஆராய்வோம் :

சிற்றூர்களின் தாழ்நிலைமைக்கு முதற்காரணம் மக்களுள் பெரும்பாலோர் பொருளிலும் அறிவிலும் வறியரா யிருத்தலே ஆகும். ஆதலின், முதலில் அவர்களது வறுமையை ஒழிக்கவேண்டும் ; அறியாமையை அகற்ற வேண்டும்.

நமது நாட்டில் நூற்றுவருக்கு அறுபத்தைவர் உழவர்களா யிருக்கின்றனர். பயிர்த்தொழிலின் நிலைமை வருந்தத் தக்கதா யிருக்கின்றது. உழவுமாடுகள் உரனுடையனவா யில்லை. மற்றை நாடுகளில் யந்திரங்களாலும் குதிரைகளாலும் உழுகின்ற காலத்தில், நம் நாட்டில் உழுதற்கு வலிய எருதுகளும் இல்லை என்றால், உழுதொழிலின் நிலைமை என்னாகும்! மாடுகள் மேய்தற்கு வேண்டிய மேய்ச்சல் நிலம் இல்லை. இதில் அரசாங்கத்தார் கவனம் செலுத்த வேண்டும்.

நமது நாட்டில் உழுதொழில் புரியும் மக்களுள் ஒவ்வொருவருக்கும் சராசரி ஐம்பது ரூபாய் கடன் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டுளது. இந்நிலையில் உழுதொழில் ஓங்குதல் எப்படி? உழவர்-

களும் தொழிலில் ஊக்கமும் முயற்சியும் உடையவ-ராதல் வேண்டும்; எருச் சேர்த்தல், வித்துக்களைத் தேர்ந்தெடுத்தல், நிலத்துக்கேற்ற பயிர் செய்தல், முதலியவற்றில் ஊக்கம் செலுத்துதல் வேண்டும்.

உழவர் தங்களுக்கு வேலையில்லாக் காலத்தை வீணாகக் கழிக்கின்றனர்; அக்காலங்களில் வேறு யாதேனும் தொழில் செய்யலாம்; பாய் முடைதல், கயிறு திரித்தல் முதலிய தொழில்களில் ஈடுபடலாம்.

உழவர் நெல் முதலிய தானியங்களையேயன்றி, பழமரங்களை வைத்துப் பயிர் செய்யவேண்டும்; பூஞ்செடிகளை வளர்த்தல், கறிகாய்ச் செடிகளைப் பயிரிடுதல் முதலியவற்றையும் கைக்கொள்ளலாம்.

சிற்றூர் மக்கள் தம் பொதுநன்மைக்காக வாரத்-திற்கு ஒருநாள், அல்லது இரண்டு வாரத்திற்கு ஒரு நாள் வேலை செய்ய ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அவ் வேற்பாட்டால் பொதுக்கிணறு, குளம் இவை தோண்டுதல், சாலை அமைத்தல், பொதுச்சாவடி கட்டுதல், ஊர்ப்புறங்களைத் தூய்மை செய்தல் முதலியவற்றை எளிதில் நடத்திவிடலாம். இப்போது இத்தகைய ஏற்பாட்டை அரசாங்கத்-தாரே ஏற்படுத்துகின்றனர். நாம் இவ்வாறு செய்-யின் அரசாங்கமும் பொருளுதவி செய்யும்.

சிற்றூர்களில் பஞ்சாயத்துச்சபை ஏற்படுத்த வேண்டும். அங்கு ஏற்படுஞ் சண்டை சச்சரவு-களையும் வழக்குக்களையும் பஞ்சாயத்தார் கவனித்து முடிவு செய்யவேண்டும். அரசாங்கத்தார் சில சிற்-

றூர்களில் பஞ்சாயத்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறே எல்லா ஊர்களிலும் ஏற்படுத்தல் நல்லது.

கூட்டுறவுச்சங்கத்தை ஏற்படுத்தி, எல்லாரையும் அதில் உறுப்பினராகச் சேர்க்கவேண்டும். குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும்.

எல்லா ஊர்களிலும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துதல் வேண்டும். வயதான பெரியவர்களுக்கு இரவுப்பள்ளிகளை அமைத்து, அவர்களுக்குக் கல்வி-



யில் விருப்பத்தை உண்டாக்கவேண்டும். படிப்பகங்களை ஏற்படுத்துதல் வேண்டும். அவற்றில் நல்ல புத்தகங்களைத் தொகுத்து வைக்கவேண்டும்;

செய்தித் தாள்களை வருவிக்க வேண்டும். அங்கு வந்து படிக்கும்படி ஊராருக்கு ஆவலை உண்டு-பண்ண வேண்டும். ஒவ்வொரு சிற்றூரிலும் ஐந்தாம் வகுப்புவரையுமாவது படித்தற்கு ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் முதற்கடமையாகும். அதுவே-யன்றி, எல்லாச் சிறுவர்களும் ஐந்தாம் வகுப்புவரை படித்தே தீரல் வேண்டும் என்று விதி ஏற்படுத்துதல் வேண்டும்.

சிற்றூர்களில் போக்குவரவிற் குரிய வசதிகளை இன்னும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும்; அஞ்சல், தந்தி வசதிகளை வேண்டிய அளவிற்கு அமைத்தல் வேண்டும்.

சிற்றூர்களில் மருத்துவ நிலையம் அமைப்பதோடு, வீடுகளையும் தெருக்களையும் தூய்மையாக வைத்-திருக்கும்படி கற்பிக்கவேண்டும். இவைகளை முக்கிய-மாக அரசாங்கத்தார் கவனித்தல் வேண்டும். அர-சியல் அலுவலாளர்கள் சிற்றூர்மக்களோடு அன்-புறக் கலந்து, அவர்கட்கு அறிவு புகட்டவேண்டும். சிற்றூர் மக்களும் சீர்திருத்தத்தில் நோக்கம் கொள்-ளுதல் வேண்டும்; தெருக்களிலும் பொதுவிடங்-களிலும் அசுத்தம் செய்தல் கூடாது; நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும்; பொது-நன்மையை ஒவ்வொருவரும் கருதவேண்டும்.

சிற்றூர்களில் முன்பு நடைபெற்றுவந்த நூல்-நூற்றல், நெய்தல் முதலிய தொழில்கள் நாளடை-வில் கெட்டொழிந்தன. இப்போது மகாத்மா காந்தியடிகளின் முயற்சியால் அவை புத்துயிர்

பெற்றன. கைத்தறியால் நெய்யப்படுங் கதராடை-களுக்கு விலை அதிகமாயிருக்கின்றது. அதனால் ஏழைகள் அவ் வுடைகளை வாங்க இயலவில்லை. இத்தொழில் செய்பவருக்கு வேலைக்குத் தக்க கூலியும் கிடைக்கவில்லை. ஆதலின், அரசாங்கத்தார் பொரு-ளுதவி செய்து இத்தொழிலை ஆதரித்து வருகிறார்கள். இன்னும் மிகுதியாக உதவி செய்யவேண்டும்.

அரசாங்கத்தார் இப்பொழுது நாட்டின் நலத்-துக்கு வேண்டிய திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கி-றார்கள். அவற்றின் மூலமாகச் சிற்றூர்களில் குடி-தண்ணீர்க் கிணறு தோண்டுதல், போக்கு வரவுக்-கேற்ற வழிகளை அமைத்தல், ஆதாரக் கல்விப்-பள்ளிகளை ஏற்படுத்தல், உழவுத்தொழில் முன்னேற்-றத்துக்குப் பலவித உதவி செய்தல், மருத்துவ நிலை-யங்களை ஏற்படுத்தல், இலவசக்கல்வி கற்பித்தல், மின்விளக்குக்களை அமைத்தல், வானொலி வசதி ஏற்படுத்தல், படிப்பகம் நிறுவல் முதலியவற்றை நடைபெறச் செய்கிறார்கள்; அன்றியும், கூட்டுறவுக் கழகத்தின் மூலமாகத் துணிகளை நெய்து குறைந்த விலைக்கு விற்று வருகிறார்கள்.

நம் நாட்டில் ஆங்காங்குப் பனையோலை, கோரை, நெட்டி முதலிய பொருள்களால் பலவித-மான தொழில்கள் நடைபெறுகின்றன. இத்தொழில்-களைப் பல ஊர்களிலும் நடைபெறச் செய்தால் வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும்; பொருளும் சேரும்.

## வினுக்கள்

1. சிற்றூர்களின் தாழ்விற்கு முக்கியக் காரணம் என்ன?
2. உழவுத்தொழிலைப்பற்றி அரசாங்கத்தார் கவனிக்க வேண்டியவை யாவை?
3. உழவர்கள் ஓய்வு நேரங்களில் என்ன செய்ய வேண்டும்?
4. சிற்றூர் மக்கள் செய்யவேண்டிய பொதுக் காரியங்கள் யாவை?
5. பஞ்சாயத்தார் கடமை என்ன?

## பயிற்சி

1. கீழ்க்காணுஞ் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்து எதுதுக :—

முயற்சி, பெரும்பாலார், வழக்கு, தொகு.

2. இம்மொழிகளுக்கு எதிர்மொழி எழுது :—

நன்மை, குறைந்தது, வறியர், விருப்பம், தவறு, நல்லது, உயர்நிலை, சிறுவர்.

3. பின்வருந் தொடர்களைப் பிரித்து எழுதுக.

சிற்றூர் —
ஊர்ப்புறம் —
பொருளுதவி —
ஆங்காங்கு —
பனையோலை —

## 2. ஜவஹர்லால் நேரு

இந்தியாவில் நாட்டுப்பற்று மிக்கவர்களுள் சிறந்தவர் ஜவஹர்லால் நேரு. அவர் காஷ்மீர நாட்டுப் பண்டிதர் மரபைச் சேர்ந்தவர். அம் மரபினர் புலமை மிக்க பண்டிதர்கள்; நாட்டிற்கு உழைக்கும் நல்லவர்கள். முகம்மதியர் காஷ்மீர-நாட்டின் மீது படையெடுத்தபொழுது, அம் மரபி-னருட் சிலர் வட இந்தியாவின் உட்பகுதியில் வந்து குடியேறினர்.

ஜவஹர்லால் நேரு 1889-ஆம் வருடம் நவம்-பர்த் திங்கள் பதினுன்காம் நாள் அலாகாபாத்திலுள்ள மீர்கஞ்சு என்னுமிடத்தில் பிறந்தார். அவர் தந்தை-யார் மோதிலால் நேரு என்பவர்; தாயார் சொரூப-ராணி. மோதிலால் நேரு அந் நகர உயர்நீதி-மன்றத்தில் வழக்கறிஞராய் இருந்து புகழ்பெற்றவர்; செல்வத்தில் குபேரனைப் போன்று விளங்கியவர்; கவர்னர்களோடு நெருங்கிப் பழகும் பெருமை பெற்-றவர். மோதிலால் மேல்நாட்டு நாகரிகமுறையைப் பின்பற்றியவர்.

ஜவஹருக்கு வளர்ப்புத் தாயாரா யிருந்தவர்கள் ஐரோப்பியத் தாதிமார்களே. அவருக்குக் கல்வி கற்பித்தவரும் ஐரோப்பிய ஆசிரியர்களே. 'ப்ரூக்ஸ்' என்ற பெரியார் ஜவஹர்லாலுக்குக் கீதையைக் கற்பித்தார்; நாட்டுப்பற்றை ஊட்டினர்; இந்திய நாட்டின் பெருமையை எடுத்துரைத்தார்.

ஜவஹர்லால் பதினைந்தாம் வயதில் மேற்படிப்-பிற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு

'ஹாரோ' பள்ளிக்கூடத்தில் மாணுக்கராய்ச் சேர்ந்தார். அப் பள்ளியில் கல்வி பயிலுவோர் அரசகுமாரர்களும் செல்வர்மக்களுமே யாவர். அவர் பின்னர், கேம்பிரிட்ஜில் படித்து எம். ஏ. பட்டம் பெற்ருர். அதன் பின்பு சட்டக்கல்வி பயின்று 1915-ஆம் ஆண்டில் பாரிஸ்டராகப் பதிவுசெய்து-கொண்டு, இந்தியாவுக்குத் திரும்பினுர்; தந்தை-யாரின் கீழ் வழக்கறிஞர் தொழிலே நடத்திப் புகழ் பெற்ருர்.

1916-ஆம் ஆண்டில் வட இந்தியாவில் வாழ்ந்துவந்த பெருஞ்செல்வர் ஒருவருடைய மக-ளாகிய கமலா என்னுஞ் செல்வியை ஜவஹர்லா-லுக்கு மணம் புரிவித்தனர். டில்லியில் அத் திரு-மணம் அரசகுடும்பத்தில் நடப்பதைப்போல் மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. ஐரோப்பியர்களும் திருமணத்-திற்கு வந்திருந்தனர். மணம் நிகழ்ந்த பின்னர் யாவரும் அலாகாபாத்திற்குத் திரும்பினர். பல நாட்-கள்வரை அவர் மாளிகையில் விருந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

ஜவஹர்லால் தந்தையைப்போல் மேல்நாட்டு நாகரிக வாழ்க்கைமுறையைப் பின்பற்றி வந்தவர். அவர் குதிரையேற்றம், நீந்துதல், மலேயேறுதல் முதலியவற்றில் பயிற்சி யுடையவர்.

கோகலே தென் ஆபிரிக்காவில் இருந்த இந்தி-யருக்குப் பொருளுதவி செய்ய வெளியிட்ட வேண்டு-கோளுக்காக ஜவஹர்லால் சுற்றுப்பயணம் செய்து

40,000 ரூபாய் சேர்த்துக்கொடுத்தார். அவர் முதன்முதல் நாட்டுப்பணியில் ஈடுபட்டது அப்பொழுதுதான்.

ஜவஹருக்கும் அவர் தந்தையாருக்கும் கருத்துவேற்றுமை உண்டு. ஆயினும், ஜவஹருக்குத் தந்தையினிடம் உள்ள மதிப்பு சிறிதும் குறையவில்லே. ஜவ்ஹர் கட்டுப்பாடு செய்யவும் தலைமை தாங்கவும் ஆற்றல் வாய்ந்தவர்.

1922-ஆம் ஆண்டில் ஜவஹர்லால் அலாகாபாத் நகரசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந் நகரத்துக்குச் சிறந்ததொண்டு ஆற்றினர்; சுமார் இரண்டரை ஆண்டுகள் அப் பதவியில் இருந்துவந்தார்; நூல் நூற்றல், சாரணர் இயக்கம், ஆங்கிலத்துக்கு ஈடாக இந்துஸ்தானியைப் பள்ளிகளில் கற்பித்தல் முதலியவற்றை ஏற்படுத்தினர். அவரது திறமையை ஆணையாளர் பலரும் பாராட்டியிருக்கின்றனர்.

ஜவஹர் 1922-ஆம் ஆண்டு முதல் 1927-வரை காங்கிரஸ் சபையின் செயலாளராய் இருந்துவந்தார். 1926-இல் மனைவியோடு ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்தார்; அங்கு ரஷியாவின் அரசியல்முறை அவர் மனத்தில் வேர் ஊன்றியது.

இந்திய இளைஞருக்கு ஜவஹர்லால் கடவுள் போல் விளங்குகிருர். அவர் 1929-இல் காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் மகாத்மா காந்தி உப்புச்சட்டத்தை மீறின காலத்தில் நேருகுடும்பத்தினர் அனைவரும்

அவரைப் பின்பற்றினர். ஜவஹர் ஆறு மாதம் சிறைத்தண்டனை அடைந்தார். பின்னர், காந்தியும் மோதிலாலும் சிறைப்பட்டனர். அப்பொழுதுதான், மோதிலால்நேரு தமது ஆனந்த பவனத்துக்குச் 'சுயராஜ்ய பவனம்' என்று பெயரிட்டு அதனை நாட்டிற்கு அளித்தார்.

அரசாங்கத்தார் நாட்டில் அமைதி நிலவ-வேண்டி, 1931-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரையும் விடுதலை செய்தனர். ஆனால், அடுத்த திங்களில் மோதிலால் மண்ணுலக வாழ்வை நீத்தார். நாடு முழுவதும் மிக்க துன்பத்தில் ஆழ்ந்தது. இதைக் குறித்து ஜவஹர்லால் பின்வருமாறு தம் மகளுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

"பத்து நாள் இரவும் பகலும் தந்தையாருடன் இருந்து, அவர் எமனோடு போராடியதைக் கண்-டேன். வாழ்நாளில் அவர் பல போரில் ஈடுபட்டிருந்-தார்; தோல்வி என்பது அவருக்குத் தெரியாது. நாம் வருத்தத்திலேயே மூழ்கியிருக்க அவர் விரும்ப மாட்-டார். அவரைப்போல நாமும் நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும். அவர் எந்தக் கொள்கைக்காகத் தம் 'உடல், பொருள், உயிர்' மூன்றையும் கொடுத்-தாரோ, அதற்கே நாமும் உழைக்கவேண்டும்; வேண்டுமாயின் உயிரையும் கொடுக்கவேண்டும்."

1934-ஆம் ஆண்டில் நேர்ந்த பீஹார் பூகம்பத்-தில் ஜவஹர்லால் மண்வெட்டியும் கூடையும் சுமந்து வேலையாட்களோடு உழைத்தார். தொண்டர் பலர்



அவரைப் பின்பற்றி வேலெசெய்தனர். பின்னர், கல்கத்தாவில் அரசியலெ எதிர்த்துப் பேசினுர் என்று அவருக்கு அரசாங்கத்தார் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனே விதித்தனர். அவர் சிறையில் இருக்கையில், ஐரோப்பாவில் இருந்த அவர் மனே-விக்கு உடல்நலம் மிகக் குன்றியது. அதனுல் அவ-ரைக் காண்பதற்காக அரசாங்கத்தார் ஜவஹரை விடுதலெ செய்தனர்.

ஜவஹர் மனேவியைப் பார்ப்பதற்காக ஐரோப்-பாவிற்குச் சென்ருர். அங்கு அவ்வம்மையார் மேலு-லகம் அடைந்தார். இந்தியாநாடு முழுவதும் அந்தச் செய்தியால் வருந்தியது. ஜவஹர் அந்தத் துன்பத்-தில் மூழ்கினுர். ஆயினும், இந்தியாவிற்கு வந்து மாந்தரின் விருப்பத்திற்கு இணங்கி, இரண்டாம் முறை காங்கிரஸ் தலெவராய் அமர்ந்தார்.

ஜவஹர்லால் நேரு அஞ்சாத நெஞ்சினர்; தூய வாழ்க்கையினர்; ஏழைகளுக்கு இரங்குபவர்; எதனேயும் ஒளிக்காமல் செய்பவர்; நாட்டுப்பணியே குறியாகக் கொண்டவர். அவரைப்பற்றி மகாத்மா காந்தி கூறியிருப்பவை பின்வருமாறு:

“மனத்துணிவில் ஜவஹர்லாலெ எவரும் வெல்ல முடியாது. நாட்டுப்பற்றில் யாரும் அவரை மீற முடியாது. அவர் ஒரு போர்வீரனின் துணிவையும், சிறந்த அரசியலறிஞரின் அறிவையும் பெற்றிருக்கிருர். ஜவஹர்லால் பளிங்குபோலத் தூய்மையான மனம் உள்ளவர்; ஐயத்திற்கு இடமில்லாத உண்மை-

யாளர். குற்றம்குறை கூறமுடியாத வீரர். அவரிடம் நாட்டை ஒப்புவிப்பது பாதுகாப்பானதே.''

இத்தகைய [illegible] ஜவஹர்லால் நேரு இப்பொழு [illegible] யிருந்து ஆட்சி [illegible] வாழ்ந்து நமது [illegible] உயர்நிலைக்குக் [illegible] வருமாறு அருள்பு [illegible] இறைவனை இறைஞ்சி வழுத்துவோம்.

### வினாக்கள்

1. ஜவஹர்லால் முதல்முதல் தேசசேவையில் ஈடுபட்டது எப்பொழுது?
2. அவர் அலாகாபாத் நகரசபைத்தலைவராய் இருந்தபொழுது செய்தவை யாவை?
3. ஜவஹர்லால் நேருவின் குணங்களைக்குறித்து மகாத்மா காந்தி கூறியவை யாவை?

### பயிற்சி

1. எதிர்மொழி கூறு :—பெரியார், மேலுலகம், விரும்பு.
2. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும், கூறு. குரு, தந்தையார், அன்னை, நன்மாணக்கன், செலவு.

### இலக்கணம்

1 தந்தை, புத்தகம், இருந்தார், வந்தார் : இவையெல்லாம் பொருள், தொழில் இவற்றைக் குறித்தலால் சொல் எனப்படும். இவற்றுள் தந்தை, புத்தகம் என்பவை ஒவ்வொரு பொருளைக் குறித்தலால் **பெயர்ச்சொல்** என்று வழங்கப்படும்.

2. இருந்தார், வந்தார்: இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலைக் குறிக்கின்றன அல்லவா? ஆதலின் இவை **தொழிற்சொல்** அல்லது **வினைச்சொல்** என்று வழங்கும்.

3. காந்தியும் மோதிலாலும் சிறைப்பட்டனர். இங்கு, சிறைப்பட்டவர் இருவருடைய பெயரையும் சேர்த்துச் சொல்வதற்கு 'உம்' என்னும் சொல் இடையில் வந்துள்ளது அல்லவா? இவ்வாறு பெரும்பாலும் இடையில் வரும் சொல் **இடைச்சொல்** எனப்படும்.

4. நாடு **மிக்க** துன்பத்தில் ஆழ்ந்தது; இதில், மிக்க என்னும் சொல் துன்பம் என்னும் சொல்லுக்கு அடைமொழியாகி அதன் தன்மையைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒன்றன் தன்மையைக் குறிக்கும் சொல் **உரிச்சொல்** எனப்படும்.

இதுவரை நாம் அறிந்தவற்றால், சொற்கள் 1. பெயர்ச் சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல் என்று நான்கு வகைப்படும் என்பது விளங்கும்.

---

# 3. பால்பண்ணை

நமது நாட்டில் சிற்றூர்களே மிகுந்துள்ளன. சிற்றூர்களில் இருப்பவர்களுள் பெரும்பாலோர் உழவுத்தொழில் செய்கின்றனர். உழவுத்தொழிலில் கிடைக்கும் வருவாய் உழவர் வாழ்க்கைக்குப் போதியதாயில்லை. ஆதலின், அவர்கள் அதனோடு வேறு ஒரு தொழிலைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது.

உழவர்கட்கு ஆண்டில் ஐந்தாறு திங்களில் வேலை இருக்காது. அந்தக் காலங்களில் ஏதாவது கைத்தொழில் செய்யலாம். நூல் நூற்றல், நெய்தல், பூவேலை செய்தல், பாய் முடைதல், கயிறு திரித்தல் முதலிய வேலைகளைச் செய்யலாம். அன்றியும், தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், அதிகம் பால்தரும்

மாடுகளை வளர்த்தல், ஆடுகளை வளர்த்தல் முதலிய தொழில்களை நடத்தினுல் அதிக ஊதியம் அடையலாம். இத்தொழில்களுள் மாடுகளை வளர்த்தலைப்பற்றி இங்குக் கவனிப்போம்.

நாம் உண்ணும் உணவில் நமது உடம்பை வளர்த்தற்கு வேண்டிய சத்துப்பொருள்கள் எல்லாம் அமைந்திருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் நம் உடல் வலிமை பெற்றிருக்கும்; நோய்கள் வரமாட்டா. நம் உடல்நலனுக்கு வேண்டிய பலவகைச் சத்துப்பொருள்களையும் உடையது பால். ஆதலின், அது குழந்தைகள்முதல் முதியோர் வரை எல்லாருக்குமே ஏற்ற உணவா யிருக்கிறது. பாலிலிருந்து வெண்ணெய் எடுக்கிருேம். அதில் கொழுப்புச் சத்து அதிகம். வெண்ணெயை நெய்யாக உருக்கி உண்கின்ருேம். தயிரும் மோரும் உடல் நலனுக்கு உற்றவையே.

பாலினுல் வாழ்நாள் நீளும் என்றும், நெய்யினுல் அறிவு வளரும் என்றும் நம் முன்னேர் அறிந்து கூறியிருக்கின்றனர். ஆயின், நம் நாட்டினர் உட்கொள்ளும் பாலின் அளவு மிகக்குறைவு. சராசரியாக நாம் ஒவ்வொருவரும் மூன்று நான்கு அவுன்ஸ் பாலையே உட்கொள்கின்ருேம் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. சிறுவர்கள் எட்டு அவுன்ஸ் பாலையும் முதியவர் பதினைந்து அவுன்ஸ் பாலையுமாவது பருகவேண்டும். மற்ற நாடுகளில் வாழ்பவர் நம்மைக்காட்டிலும் பத்துப் பதினைந்து மடங்கு அதிகமாகப் பால் பருகுகின்றனர்! நம் நாட்டில் அந்த அளவுக்-

குப் பால் கிடைத்தல் இல்லை. இந்தக் குறையைப் போக்க வழிகாண வேண்டும்.

பால் குறை நீங்கவேண்டுமானல், உயர்ந்த இனத்துப் பசுக்களை நன்கு வளர்க்க வேண்டும். நமது நாட்டில் வடபகுதியில் பஞ்சாப், கத்தியவார் முதலிய இடங்களில் உயர்ந்த இனப் பசுக்கள் அதிகம் உள. நமது தென்னுட்டில் ஓங்கோல், காங்கேயம் முதலான இனங்கள் உயர்ந்த இனங்களே. மதுரை, மணப்பாறை முதலிய இடங்களிலும் சிறந்த இனங்கள் உள. எருமைகளிலும் இவ்வாறு உயர்வான இனங்கள் உள. உயர்ந்த இனத்து மாடுகள் அதிகம் பால் கறக்கும். ஆதலின், அவ்வினங்களை வளர்த்துப் பெருக்க வேண்டும். உயர்ந்த இனத்து மாடுகளைத் தக்க இடத்தில் வைத்து நல்ல முறையில் ஊதியம் கிடைக்கும்படி வளர்க்குந் தொழில் 'பால்பண்ணை' எனப்படும். பால் பண்ணையில் குறைந்தது எழுபது, எண்பது மாடுகள் இருத்தல் வேண்டும்.

நமது நாட்டில் இப்போது பால் பண்ணைகள் பலவிடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் மொத்தத்தில் எண்பதுக்கு மேல் இல்லை. அவற்றுள்ளும் நல்லமுறையில் நடத்தப்படுபவை சிலவே யாகும்.

சிற்றூர்களில் சிலர் இரண்டு மூன்று மாடுகளை வளர்க்கின்றனர். அவற்ருல் அதிக ஊதியம் கிடைக்காது. சாதாரணமாக ஒரு மனிதர் எழுபது எண்பது உயர்ந்த இனமாடுகளை வளர்ப்பது இயலாத செயலே.

ஆதலின், பலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் பால்பண்ணையை நடத்தவேண்டும். அவ்வாறு நடத்தினால் மாடுகளுக்கு வேண்டிய தீனிகளைக் குறைந்த விலைக்கு வாங்கலாம். பால், வெண்ணெய், நெய் முதலியவற்றைப் பக்கங்களிலுள்ள நகரங்கட்கு அனுப்பி அதிக ஊதியம் கிடைக்கும் முறையில் விற்கலாம். அன்றியும், உயர்ந்த எருதுகளை விற்று ஊதியம் அடையலாம்; நிலத்துக்குச் சிறந்த எருவையுஞ் சேர்க்கலாம். இவற்றால் உழவுத்தொழிலும் ஊதியம் தருவதாகும். இத்தகைய பால்பண்ணைகளால் சில நாடுகளில் அதிக ஊதியம் அடைகின்றனர்

இத்தொழிலை நடத்துபவருக்கு அரசாங்கத்தாரும் பொருளுதவி செய்ய வேண்டும்; மாடுகட்கு மேய்ச்சல் நிலங்களை வேண்டுமளவு உதவவேண்டும்; தீனிகள் எளிதில் கிடைக்குமாறு அவற்றையும் பெருக்கவேண்டும்; மாடுகட்கு வரும் நோய்களைத் தடுக்கவும் நீக்கவும் ஏற்றவாறு மருத்துவவுதவி செய்ய வேண்டும்.

நம் நாட்டவர் பால் பண்ணைகள் பலவற்றை நடத்தி அதிகம் பால் நெய் முதலியவற்றை உண்டாக்கி, வேண்டும் அளவில் உண்டு, வலிய உடல் உடையவராய் நெடுநாள் இனிது வாழ்வாராக.

**வினாக்கள்**

1. பாலைச் சிறந்த உணவாகக் கொள்வது ஏன்?
2. சாதாரணமாக ஒவ்வொருவரும் எவ்வளவு பால் பருகவேண்டும்? நமது நாட்டவர் எவ்வளவு பால் பருகுகின்றனர்?

3. பால்பண்ணை அமைத்தல் ஏன்?
4. பால்பண்ணையைப்பற்றித் தெரிந்ததை எழுது.
5. பால்பண்ணை நடத்துபவருக்கு அரசாங்கத்தார் செய்யவேண்டிய உதவிகள் யாவை?

பயிற்சி

1. 'முதல்' 'வரை' என்னும் சொற்களை அமைத்து வாக்கியம் எழுதுக.
2. வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:

——— 'பால்பண்ணை' எனப்படும்.

———இனங்கள் உயர்ந்த இனங்களே.

நிலத்துக்குச் சிறந்த ———

இத்தகைய பால் பண்ணைகளால் ———

# 4. கன்னன் கொடை

பாண்டவர் பன்னிரண்டு ஆண்டுகளைக் காட்டிலும் ஓர் ஆண்டினை நாட்டிலும் கழித்து, பின், தங்கள் நாட்டைப் பெறவேண்டி, கண்ணபிரானைத் துரியோதனனிடம் தூது விடுத்தனர். கண்ணபிரான் அவ்வாறே சென்று, துரியோதனனைக் கண்டு பாண்டவர்நாட்டைக் கொடுக்கும்படி வேண்டினர். துரியோதனன் ஒன்றற்கும் இணங்கவில்லை. அதனால், பாண்டவர் போர் புரிந்து நாட்டைக் கைப்பற்ற வேண்டுவதாயிற்று.

கண்ணபிரான் போரைக்குறித்து எண்ணிப்பார்த்தார். 'துரியோதனனுக்கு உயிர்த்தோழனாய்க்

கன்னன் விளங்குகின்ருன். அவன் சிறந்த வில்-வீரன். அவனே விசயனிடம் கடும்பகை உள்ளவன். அவன்வன்மையைத் தவிர்த்தாலன்றி, பாண்டவர் வெற்றி பெறுதல் அரிது. இதற்கு யாது செய்யலாம்?' என்று நெடுநேரஞ் சிந்தித்தார்; பின்னர், இந்திரனை நினைத்தார். அவன் உடனே அங்கு வந்து கண்ணபிரானை வணங்கி, 'நான் செய்ய வேண்டிய பணியை அருளிச்செய்க' என்று வேண்டினான்.

கண்ணபிரான் இந்திரனை நோக்கி, "வேந்தே, இனி, பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் கடும் போர் நிகழும். துரியோதனன்பக்கல் வில்வீரர் பலர் இருக்-கின்றனர். அவருள் கன்னன் சிறந்தவன். கன்னன் உடலோடு தோன்றியுள்ள கவசத்தையும் குண்ட-லத்தையும் உடையவன். அவனுடலில் அவை யிருக்குமளவும் அவன்மேல் எந்த அம்பும் தாக்காது; அவனை வெல்லுதலும் இயலாது. கன்னன் விசய னிடம் மிக்க பகைமை உள்ளவன்; அவனைக் கொல்-லுதற் பொருட்டுக் கொடிய அரவத்தை வளர்த்து வருகிருன். விசயன் இறப்பானுயின், மற்றை நால்-வரும் உய்யார்; உடன் இறப்பர். உலகமெல்லாம் கொடியவனுகிய துரியோதனன்கைப்பட்டு வருந்-தும். ஆதலின் நீ முதிய மறையவன்வடிவங் கொண்டு சென்று, கன்னனுடைய கவச குண்டலங்-களைப் பெற்றுவரல் வேண்டும். உனக்கு விசயனிடத்-தில் மிக்க அன்பு உண்டு என்பதை அறிவேன். ஆதலின், நீ இதனைச் செய்து பாண்டவரை உய்விக்க வேண்டும். கன்னன் கொடையிற் சிறந்தவன். அவன் வானவருக்கும், மறையவருக்கும், துறவி-

களுக்கும், கற்றவருக்கும், கல்லாதவருக்கும், எல்லாருக்கும் மனம் உவந்து ஈயும் நற்குணம் உள்ளவன். ஆதலின், நீ மறையவனுய்ச் சென்று வேண்டுவாயாகில், அவன், தன் கவச குண்டலங்களை ' இல்லை ' என்று சொல்லாமல், உடனே ஈந்து விடுவான். பின்னர் அவனை வெல்லுதல் எளிது ” என்று உரைத்தார்.

இந்திரனும் அதற்கு உடன்பட்டான். அவன் நரைத்த முதிய மறையவன்வடிவங் கொண்டான். ஒரு கையில் தடியை ஊன்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்ருன். சென்று, கன்னனின் அரண்மனை வாயிலை அடைந்தான். வாயிற்காவலர் அவனை நோக்கி, ' ஐயரே, எம் அரசர் ஒவ்வொரு நாளும் முற்பகலில் நன்கொடை வழங்குவார்; இப்போது முற்பகல் கழிந்தது; நீர் இன்று போய் நாளை முற்பகலில் வாரும் ' என்றனர். அதைக்கேட்ட மறையவன், ' நான் என்னுல் கூடிய அளவு விரைந்து நடந்து வந்தேன். ஆயினும், என் முதுமையினுல் இவ்வளவு நேரம் ஆயிற்று. என்செய்வேன் !' என்று வருந்திக் கூறினுன்.

அந்தணன் கூறியதைக் கேட்ட கன்னன், அவனை அழைத்து வரும்படி ஆணை இட்டான். காவலர் முதியவனை உள்ளே விடுத்தனர். மறையவனைக் கண்டதும், கன்னன் விழுந்து வணங்கி, ' தாங்கள் விரும்பியதைத் தெரிவித்தருள வேண்டும்' என்று வேண்டினுன். மறையவன், ' நான் வேண்டுவதைத் தருவீரா ?' என்று வினவினுன். கன்னன் ' தாங்கள் என் உயிரைக் கேட்பினும் தடையின்றித்

தருவேன்' என்று சொன்னான். உடனே கள்ள மறையவன் 'உம்முடைய கவச குண்டலங்களைத்



தாரும்' என்று வேண்டினான். கன்னன் தன் உடலி-னின்று கவசத்தை அரிந்து எடுக்கலானான். அச்-

சமயத்தில் ‘இவன் இந்திரன்; கண்ணனால் ஏவப்பட்டு வஞ்சகமாக வந்திருக்கிறான். கவசகுண்டலங்களை இவனுக்குக் கொடுக்காதே’ என்று வானத்தில் ஓர் ஒலி உண்டாயிற்று. கன்னன் அதைக் கேட்டும், “இல்லை” என்று சொல்லாமல், கவசகுண்டலங்களை அரிந்து மறையவனுக்கு வழங்கினான். அப்போது அவன் உடலினின்று குருதி பாய்ந்தது. அதனைக் கண்டவர் வருந்தினர்; வியந்தனர்; புகழ்ந்தனர்.

கன்னனது அருங்கொடையினைக் கண்ட இந்திரன், தனது உண்மைவடிவங் கொண்டு கன்னன்முன் நின்று அவனைப் புகழ்ந்தான். கன்னன் இந்திரனைக் கண்ணாரக் கண்டு களித்தான். இந்திரன் மகிழ்ந்து ஒரு வேல்படையைக் கன்னனுக்குக் கொடுத்து, ‘இதை விசயன்மேல் மட்டும் எறியாதே; பிறர்மேல் எறி. இது உனக்கு வெற்றியைத் தரும்’ என்று கூறினான். கன்னன் வணங்கி, அதனைக் கைக்கொண்டான்.

இந்திரன் கண்ணனிடம் சென்று நடந்ததைக் கூறி, கன்னனைப் பாராட்டினான்; பின்னர், அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

கண்ணபிரான் அதன் பின், குந்திதேவியின் மனையை அடைந்தார்; அங்குக் குந்திதேவியை நோக்கி, ‘நான் துரியோதனனிடம் தூது சென்றேன். அவன் உம்முடைய மக்களுக்கு நாட்டைக் கொடுக்க உடன்படவில்லை. ஆதலால், இனிப் போர் நிகழும். விசயனைக் கொல்வதற்காகக் கன்னன் அரவை வளர்த்து வருகிறான். அவனே உம்முடைய

முதல்மகன். நீர் அவனிடம் சென்று அப் பாம்பை விசயன்மேல் மறுமுறை ஏவாமல் இருக்க வரம் பெற்று வரவேண்டும்' என்று கூறி அனுப்பினர்.

குந்திதேவி கன்னனின் அரண்மனையை அடைந்தாள். அவளைக் கண்டதும், கன்னன் அவளடிகளில் வீழ்ந்து வணங்கினன்; பின்பு ஓர் இருக்கையில் அமர்வித்து, 'தாங்கள் இங்கு வந்த காரணம் யாது? அருள் கூர்ந்து அருளிச்செய்ய வேண்டும்' என்றான். குந்தி, 'செல்வ, நான் பெரும்பாவி; உன் மழலைச்சொல்லைக் கேட்கப் பெறவில்லை; உன் தளர்நடையைக் காணப்பெறவில்லை' என்று வருந்திக் கூறினள். கன்னன் அவளைத் தன் தாய் என்று தெளிந்து வணங்கி, 'தாயே, நான் உம்மிடம் வளர்வதற்கு நற்செயல் செய்திருக்கவில்லை. அதனைப்பற்றி இப்பொழுது வருந்திப் பயன் என்ன? தாங்கள் திருவுள்ளக் கருத்தினைத் தெரிவித்தருள்க' என்று வேண்டினன்.

அப்பொழுது குந்தி 'மகனே, நீ உன் தம்பிமாரோடு வந்து வாழ்தல் வேண்டும். அவர்கள் உனக்கு ஏவல் செய்வார்கள்' என்றாள். கன்னன், 'தாயே, துரியோதனன் எனக்குப் பல நன்மைகள் செய்திருக்கிறன். அவன்சோற்றை உண்டு உயிர் வாழ்கிறேன். ஆதலால், நான் அவனை விட்டு அங்கு வருதல் நேர்மை அன்று. வேறு ஏதாகிலும் வேண்டிக்கொள்ளும்' என்றான். குந்தி, 'வீர, நீ வளர்த்து வரும் பாம்பை விசயன்மேல் இரண்டாம் முறை ஏவக் கூடாது; மற்ற நால்வரையும் கொல்லு-

தல் கூடாது. இந்த வரங்களைத் தர வேண்டும்' என்றாள். கன்னன் 'தாயே, தாம் கூறியபடியே செய்வேன்; நான் இறந்து போவதாயிருந்தாலும் இரண்டாம் முறை அரவை விடமாட்டேன். நீர் கவலைப்பட வேண்டா' என்று உரைத்தான்.

கன்னனது நற்குணத்தையும் கொடைத்தன்மையையும் அறிந்து, குந்தி வியந்தாள்; புகழ்ந்தாள். பின்பு அவள் கன்னனை வாழ்த்திவிட்டுத் தன் இருப்பிடம் அடைந்தாள்; நடந்ததனைக் கண்ணபிரானிடம் தெரிவித்தாள். கண்ணபிரானும் கன்னனைப் புகழ்ந்து உரைத்தார்.

### வினாக்கள்

1. தேவேந்திரனிடம் கண்ணபிரான் என்ன சொன்னார்?
2. இந்திரன் கன்னனுக்குக் கொடுத்தது யாது? ஏன்?
3. குந்திதேவி யார்? அவர் கன்னனிடம் வேண்டியவை யாவை?

### பயிற்சி

**1. தாம் தூது போய்வந்த செய்தியைக் கண்ணன் தரும புத்திரரிடம் கூறுவதுபோல் எழுது.**

**2. குந்தியும் கன்னனும் பேசிக்கொண்டதை உரையாடல் முறையில் எழுது.**

**3. நிகழ்ந்ததைக் கண்ணனிடம் குந்திதேவி சொல்வது போல் எழுது.**

### இலக்கணம்

1. கன்னன், வீரர், அம்பு, அரவம்: இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்தலால் **பொருட்பெயர்** எனப்படும்.

2. காடு, அரண்மனை: இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்தைக் குறிக்கின்றன. அதனால், **இடப்பெயர்** எனப்படும்.

3. ஆண்டு, பகல்: இவை ஒவ்வொரு காலத்தைக் குறிக்கின்றன. அதனால், **காலப்பெயர்** எனப்படும்.

4. கை, கண்: இவை ஒவ்வோர் உறுப்பினைக் குறிக்கின்றன. அதனால், **உறுப்புப்பெயர்** அல்லது **சினைப்பெயர்** எனப்படும்.

5. வன்மை, அன்பு: இவை ஒவ்வொரு பண்பைக் குறித்தலால், **பண்புப்பெயர்** எனப்படும்.

6. கொடை, வெல்லுதல்: இவை ஒவ்வொரு தொழிலைக் குறித்தலால் **தொழிற்பெயர்** எனப்படும்.

இவற்றால் பெயர்ச்சொற்கள் எல்லாம் 1. பொருட்பெயர், 2. இடப்பெயர், 3. காலப்பெயர், 4. சினைப்பெயர், 5. பண்புப்பெயர், 6. தொழிற்பெயர் என்று ஆறு வகைப்படும் என்று அறியலாகும்.

---

# 5. தொற்றுநோய்

மனிதர்களுக்குத் துன்பந் தருபவற்றுள் முக்கியமானவை வறுமையும் நோயும் ஆகும். வறுமையினும் நோயே கொடியது. நோய்களுள் சாதாரணக் காய்ச்சல், உடல்வலி, காதுவலி முதலிய நோய்கள் நோயாளியைமட்டுமே வருத்தும்; அவருக்கு அருகில் இருப்பவர்களைப் பீடிக்கமாட்டா. குளிர்காய்ச்சல், கண்வலி, வைசூரி முதலிய வேறு சில நோய்கள் நோயாளிக்கு உதவி செய்ய அருகில் செல்பவர்களையும், அடுத்த இடங்களில் இருப்பவர்களையும் பற்றும்.

அப்படிப்பட்ட நோய்க்குத் 'தொற்றுநோய்' என்று பெயர். தொற்றுநோயைச் சிலர் 'ஒட்டுவார் ஒட்டி' என்று சொல்வார்கள்.

தொற்றுநோய்கள் அணுவுயிர்களால் உண்டாகின்றன. அணுவுயிர்கள் நம்மைச்சுற்றி நாலுபக்கத்திலும் வசிக்கின்றன. அவை நாம் உட்கொள்ளும் காற்று, நீர் முதலியவற்றோடு சேர்ந்து நம் உடம்பினுட் செல்கின்றன. அன்றியும், உடம்பில் காயம் ஏற்பட்டால், அதன் மூலமாகவும் உள்ளே சென்றுவிடும். ஆயின், எல்லா அணுக்களும் நோயை உண்டுபண்ணுவன அல்ல. சில அணுக்கள் விரைவில் நோயை உண்டாக்கும்; சில அணுக்கள் பல ஆண்டுகட்குப் பிறகு நோயை உண்டுபண்ணும். க்ஷயம், குஷ்டம் முதலிய நோய்கள் நெடுங்காலத்துக்குப் பின் உண்டாவன.

தொற்றுநோய்களுள் முக்கியமானவை — சொறிசிரங்கு, கண் வலி, குளிர்காய்ச்சல், வைசூரி, வாந்திபேதி, பிளேக் முதலியவை. இவற்றுள் குளிர்காய்ச்சல் முதலியவை கொடுமையானவை. ஆகலின், அவற்றைக் குறித்து இங்குச் சிறிது கவனிப்போம்.

**குளிர்காய்ச்சல் :—** குளிர்காய்ச்சலைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. அதற்குக் காரணம் அது நெடுங்காலமாக நடைபெற்று வருவதேயாகும். குளிர்காய்ச்சலால் இறப்பவர் பலர். நமது நாட்டில் ஒரு வருடத்தில் ஏறக்குறைய ஐம்பது நூறாயிரம் மனிதர்

இந்நோயால் இறக்கின்றனர். குளிர்காய்ச்சலை 'மலேரியா காய்ச்சல்' என்று சொல்வது உண்டு.

குளிர்காய்ச்சல் ஒருவகை அணுக்களால் உண்டாகின்றது. அந்த அணுக்கள் 'அனோபிலிஸ்' என்னும் ஒரு வகைக்கொதுகுகளைச் சார்ந்திருக்கும். அக்கொதுகுகள் நம்மைக் கடிக்கும்பொழுது, அவ்வணுக்கள் குருதியில் கலக்கின்றன; பின்பு அவற்றால் காய்ச்சல் உண்டாகின்றது.

மலேரியா நோய்க்குக் காரணமான கொதுகுகள் புல், பூண்டு, பூச்சிகள் இருக்கின்ற குட்டைகளிலும் வாய்க்கால்களிலும் வசிக்கும்; சதுப்புநிலத்திலும் தங்கியிருக்கும். அவை அரைமைல் தொலைவுவரை செல்லும். அந்தக்கொதுகுகளை அழிக்க வேண்டுமானால், அழுக்கு அடைந்த நீர்நிலைகளைத் தூர்த்துவிடவேண்டும்; தேங்கிக் கிடக்குந் தண்ணீரில் சிறிது மண்ணெண்ணெயாவது, 'பெட்ரோலிய'மாவது ஊற்ற வேண்டும். ஊரின் பக்கங்களை அசுத்தம் செய்யக்கூடாது. வீடுகளுக்கு முன்னால், மரம் செடிகள் அடர்ந்திருத்தல் ஆகாது. வீட்டுக்குள் வெளிச்சமும் காற்றும் வருவதற்கு வசதி செய்ய வேண்டும். இரவில் கொதுகுவலையைப் பயன்படுத்தல் நல்லது. 'க்வினின்' என்னும் மருந்தைத் தின்றால் காய்ச்சல் நீங்கிவிடும்.

**வைசூரி**:—வைசூரி அச்சம் தரும் நோய். அதனால் இறப்பவர் பலர்; அதுவேயன்றி, அதனால் முகம் மாறுபாடு அடைபவர் பலர்; கண்கெடுபவர் சிலர்.

வைசூரிக்குக் காரணமான அணுக்கள் காற்றினுல் ஒரு மைல் தொலைவுவரை பரவும். அவை மனித-ருடம்பினுள் புகுந்தபின், அவற்றிலிருந்து ஒருவகை நஞ்சு உண்டாகிறது. அது சிறிதளவாயிருந்தால் தீங்கு உண்டாகாது. வைசூரி வாராமல் தடுக்க வேண்டுமானுல், அம்மை குத்திக்கொள்ள வேண்டும். ஒரு தடவை அம்மை குத்திக்கொண்டால் போதாது; ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அம்மை குத்திக்-கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு அம்மை குத்திக்-கொண்டால், வைசூரி வாராது; வந்தாலும் பெருந்-தீங்கு உண்டாகாது.

வைசூரியைப் போக்குவதற்கு மருந்து ஒன்றும் இல்லை. அதனுல், அது வாராதபடி தடுத்துக்கொள்-ளுதல் வேண்டும். வைசூரி நோய் உண்டாகுங்-காலத்தில், அடிக்கடி விளக்கெண்ணெய் சாப்பிட வேண்டும்; மோர், இளநீர் முதலியவற்றை நிறை-யக் குடித்து வரவேண்டும். அந்நோய் அருகில் பரவியிருந்தால், எண்ணெய்தேய்த்துக் குளித்தல் ஆகாது. நெய்யையும் விளக்கெண்ணெயையும் சேர்த்துத் தேய்த்துக் குளிக்கலாம்; வேறு மருந்து எண்ணெய்களைப் பயன்படுத்தலாம்.

**வாந்திபேதி:**—இந்நோய்க்குக் காரணமான அணுக்கள் காற்றின் மூலமாகப் பரவுவதில்லை; குடிக்-குந் தண்ணீரோடு மனிதர் உடம்பினுள் சேருகின்-றன; வாந்திபேதியைத் தடுக்க வேண்டுமானுல், தண்ணீரை நன்ருகக் கொதிக்கக் காய்ச்சி, வடி-கட்டிக் குடிக்க வேண்டும். பழைய உணவைச்

சாப்பிடலாகாது; சூடாயிருக்கும்போது உண்ணுதல் நல்லது. எளிதில் செரிக்கத் தக்க உணவையே உண்ண வேண்டும்; வயிறு நிறைய உண்பது நல்லதுஅன்று. இவ்வாறு கவனத்துடன் இருந்தால் வாந்திபேதி வாராது.

**ப்ளேக்:**—ப்ளேக் மிகவும் கொடிய நோய். அது சில ஆண்டுகட்கு முன், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில இடங்களில் பரவியிருந்தது. அதனால் பலர் இறந்தனர். ப்ளேக்குக்குக் காரணமாயுள்ள அணுக்கள் முதலில் எலிகளைப் பற்றும். அவற்றால், எலிகள் இறந்து விடும். அப்பொழுது எலிகளை அழிக்க வேண்டும். ப்ளேக்குக்கும் அம்மை குத்திக்கொள்வது உண்டு. அந்நோய் உண்டாகும் காலத்தில் ப்ளேக் அம்மை குத்திக்கொள்ளுதல் வேண்டும்.

சில அணுவுயிர்கள் கடும்வெயிலையும் அதிகக் குளிர்ச்சியையும் தாங்கமாட்டா. ஆயினும், அணுக்களின் முட்டைகள் வெயிலினாலாவது பனியினாலாவது அழிதல் இல்லை. அவை ஏற்ற தட்ப வெப்பம் உண்டாகும் காலத்தில் பெருகி விடும். அதனால்தான், முதல்மழை பெய்தவுடனே நச்சுக்காய்ச்சல், வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்கள் உண்டாகின்றன; வெயிற்காலத்தில் வைசூரி பரவுகின்றது.

வைசூரி, வாந்திபேதி முதலியவை சிறுதெய்வங்களால் வருகின்றன என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. ஊர்ப்புறத்தையும், நீர் நிலைகளையும்,

வீடுகளையும் தூய்மையாக வைத்திருந்தால் இந்நோய்கள் பெரும்பாலும் வரமாட்டா.

### வினாக்கள்

1. தொற்றுநோய்கள் எவற்றால் உண்டாகின்றன?
2. மலேரியா காய்ச்சல் உண்டாகாமல் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும்?
3. வாந்திபேதி எதன் மூலம் உண்டாகின்றது?
4. முதல்மழை பெய்தவுடன் காய்ச்சல் முதலிய நோய்கள் உண்டாவது ஏன்?

### பயிற்சி

**1. சொந்த வாக்கியங்களில் அமைக்க :**

கொடியது, முக்கியம், முதலியவை, நீர் நிலை, வெளிச்சம்.

**2. பிரித்து எழுது.**

நோயாளி, முக்கியமானவை, மண்ணெண்ணெய், தண்ணீர், வயிற்றுக்கடுப்பு, ஊர்ப்புறம்.

**3. எதிர்மொழி சொல்லு :**

நிறைய, நல்லது, ஆகும், தட்பம்.

---

# 6. அவ்வையார்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் புத்தகங்களை நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா? அவற்றை இயற்றியவர் அவ்வையார். அவரைப்பற்றிச் சிலவற்றையேனும் நீங்கள்

அறிந்திருப்பீர்கள். மற்றும் சிலவற்றை இங்கே கூறுவோம்:

அவ்வையார் பெண்பாலார்; கவிபாடுந் திறமை வாய்ந்து விளங்கினவர். அவர் ஓர் ஊரில் நிலையாக வாழ்ந்தவரல்லர்; தமிழ்நாட்டில் பலவிடங்களையும் பார்த்து வந்தவர் என்பது அவரைப்பற்றிய கதை-களால் விளங்குகின்றது. அவ்வையாரைக்குறித்து வழங்கும் கதைகள் மிகப்பல. அவற்றுட் பலகதை-கள் அவர் கடவுள்தன்மை வாய்ந்தவராகக் கூறு-கின்றன. சில கதைகள் அவர் பாடியவையெல்லாம் நடக்கும் என்று தெரிவிக்கின்றன. அத்தகைய கதைகளுள் ஒன்றினை இங்கே அறிவோம்.

சோழநாட்டில் அம்பர் என்னும் ஊர் ஒன்று உளது. அவ்வூரில் சிலம்பி என்னும் பெயருடைய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் யாரும் இல்லாத வறியவள். ஆதலால், பஞ்சு நூற்றுப் பணம் தேடிக் காலம் கழித்து வந்தாள். அக்காலத்தில், சோழநாட்-டில் கம்பர் என்னும் பெரும்புலவர் புகழ் பெற்று விளங்கினர். அவர்தாம் இராமாயணத்தைத் தமிழ்-மொழியில் இயற்றியவர். அதனால், அவரைக் கவிச் சக்கரவர்த்தி என்று சிறப்பித்துக் கொண்டாடுகின்-றனர். அப்பெரும்புலவர் பாடும் பாட்டுக்களால் மிக்க பயன் உண்டாகும் என்று மாந்தர் கருதினர். அதனை அறிந்த சிலம்பி, அவர் தன்னைப்பற்றிப் பாடுவாராயின், அதனால் தனக்குப் பெருஞ்செல்வம் சேரும் என்று எண்ணினள்; அதுமுதல், கம்பரிடம் ஒரு பாட்டாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்வங்கொண்டாள்.

ஒருநாள் சிலம்பி கம்பரைக் கண்டு, அவரடி-களில் வீழ்ந்து வணங்கி, 'பெருமானே, தாம் அருள் கூர்ந்து அடியாள்மேல் ஒரு பாட்டுப் பாடியருள வேண்டும்' என்று பணிவுடன் வேண்டி நின்ருள். அதனைக் கேட்ட புலவர், 'அம்மையே, யான் ஒரு பாட்டு இயற்ற வேண்டுமாயின், எனக்கு ஓராயிரம் பொன் தரல் வேண்டும். அவ்வாறு தந்தாலன்றி யான் கவிபாடுவதில்லை' என்று பகர்ந்தார். எவ்வா-ருயினும் அவரால் கவி பெற்றுக்கொள்ள விரும்பிய சிலம்பி அதற்கு இயைந்து, தான் பலகாலமாகப் பாடுபட்டுத் தேடிய பொன்னையும், தன்பால் இருந்த பொருள்களையும் எடுத்துக்கொடுத்தாள். அவை-யனைத்தும் ஐந்நூறு பொன்னே ஆயின. புலவர் அதனைப் பெற்றுக்கொண்டு,

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும்சோழ மண்டலமே'

என்று அரைப்பாட்டுப் பாடி, அதனை அவள் வீட்டுச் சுவரில் எழுதிவிட்டுச் சென்ருர்.

அரைப் பாட்டைப் பெற்ற சிலம்பி கைப்பொரு ளெல்லாம் இழந்தும், கருத்து முற்றுப்பெருமை-யால் மனம் மிக வருந்தினுள். ஆயினும், பாட்டு முழுதும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஒரே கருத்துக்கொண்டு, அதற்காகப் பின்னும் பொரு-ளீட்டத் தொடங்கினுள். ஆதலால், அவள் முன் போலவே பஞ்சு நூற்பாளாயினுள்.

அவ்வாறிருக்கையில் ஒருநாள், அவ்வையார் பசியால் வாடி, நடை தளர்ந்து, சிலம்பியின்

வீட்டை அணுகினர்; வீட்டினுள் நூற்றுக்கொண்டிருந்த சிலம்பியை நோக்கி, 'அம்மா, பசிப்பிணி வருத்துகின்றது. சிறிது சோறு இடு' என்று தளர்ந்த குரலோடு கூறி வேண்டினர். சிலம்பி அக் கிழவியின் நிலைமை கண்டு உளமிரங்கி, 'பாட்டி, அகத்தில் சோறு இல்லை, சிறிது கூழ் இருக்கிறது; அதனை வார்க்கிறேன், அருந்துவாயா ?' என்று இன்மொழியில் இசைத்தாள். அவ்வையார் அவ் வறியவளது அன்பினைப் பாராட்டி, 'அம்மா, பசிவேளையில் கூழேனும் அமிர்தமாகும்; அதனையே தாமதியாது அளிப்பாய்' என்று வேண்டினர். உடனே சிலம்பி கூழைக் கரைத்து, அவருக்கு வேண்டுமளவும் வார்த்தாள்.

கூழ் குடித்துக் களை தீர்ந்த அவ்வையார், அவள்வீட்டுத் திண்ணையிற் படுத்துச் சிறிது நேரம் உறங்கியெழுந்தார்; பிறகு, அங்கே சுவரில் எழுதியிருந்த அரைவெண்பாவைப் படித்து, அதனைக் குறித்துச் சிலம்பியை வினவினர்; அவளால் அதன் வரலாற்றை யறிந்து, 'அம்மா, ஐந்நூறு பொன் கொடுத்தும் இந்தப்பாட்டில் உன் பெயர் இல்லையே; நான் உன் பெயரை வைத்துப் பாடி இப் பாட்டை முடிக்கிறேன்' என்று கூறி,

—பெண்ணுவாள்

அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.'

என்று, மற்ற அரைப்பாட்டுப் பாடி முடித்து, அங்குநின்று அகன்ருர்.

உடனே சிலம்பிக்குக் கால்களில் பொற்சிலம்பு அணியத்தக்க பெருஞ்செல்வம் உண்டாயிற்று. சிலம்பி அதனைக் கண்டு, கிழவியின் கவித்திறத்தை-யும் சொல் நிறைவேறியதையும் புகழ்ந்து கொண்-டாடினுள்; 'கம்பருக்கு ஐந்நூறு பொன் கொடுத்தும் எனக்குச் சிறிதும் நன்மை உண்டாகவில்லையே; வீணுகப்போயிற்றே! இந்த முதியவளுக்குக் கூழ்-தானே வார்த்தேன்; வயிருரச் சோருவது இட்டே னில்லையே. இவளாலன்ருே எனக்குப் பெருஞ்செல்-வம் உண்டாயிற்று. நான் இவளுக்கு என்ன கைம்-மாறு செய்யப் போகின்றேன்!' என்று கூறி அவ்வையாரை வாழ்த்தினுள்.

அவ்வையாரைப்பற்றி இவ்வாறு வழங்குங் கதைகள் பல உள. அதனுல், அவர்பெயரை அறி-யாதவர் நம் நாட்டில் எவரும் இரார் என்னலாம்.

### வினுக்கள்

1. அவ்வையாரைக் குறித்து வழங்குங் கதைகள் கூறு-வன யாவை?

2. சிலம்பி, கம்பரிடம் பாட்டுப் பெறவேண்டும் என்று ஆர்வம் கொண்டது ஏன்?

2. கம்பர் ஏன் அரைப்பாட்டுப் பாடினுர்?

4. சிலம்பி அவ்வையாரால் பெற்ற நன்மை யாது? அவளை எவ்வாறு வாழ்த்திக் கொண்டாடினுள்?

### பயிற்சி

1. புகழ்பெற்று, இயற்றியவர், மாந்தர், பெருஞ்செல்வம், ஆர்வம், பகர்ந்தார், இசைத்தாள், சுவரில். இச்சொற்களைச்-சொற்ருெடர்களில் அமைத்து எழுதுக.

2. பெரும்புலவர், ஓராயிரம், ஐந்நூறு, கைப்பொருள், பசிப்பிணி, பொற்சிலம்பு, வயிறுர—இவற்றைப் பிரித்தெழுதுக.

3. வறியவள், இன்மொழி, தாமதித்து, அகன்றுர், அறியாதவர்—இவற்றிற்கு எதிர்மொழி கூறுக.

---

# 7. கூட்டுறவுச் சங்கம்

நமது நாட்டில் முதன்மையான தொழில் உழவுத்தொழில். உழவுத் தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் சிற்றூர்களில் வாழ்கிருர்கள். அவர்களுட் பெரும்பாலோர் ஏழைகளாயிருக்கின்றனர். ஆதலின், அவர்கள் உழவுத்தொழில் செய்வதற்குக் கையில் பொருளின்றிக் கடன் வாங்குகின்றனர். குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் கொடுப்பவர் இலர். கடன் கொடுப்பவர்களுள் பலர் அன்பு, இரக்கம், நேர்மை ஒன்றும் இல்லாத கல்நெஞ்சராய் இருக்கிருர்கள். அவர்களிடம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கி, ஏழைகள் பயிர்த்தொழில் செய்கின்றனர். உழவுத்தொழிலில் வரும் சிறிய வருமானத்தைக் கடனுக்குக் கொடுத்துவிட்டு, பின்னும் துன்பப்படுகின்றனர். இதனுல், சிலர் உழவுத் தொழிலே விட்டுவிட்டுப் பிறநாடுகளுக்குப் பிழைக்கச் செல்கின்றனர்.

உழவர்களின் பணக்குறையைத் தீர்ப்பதற்காக, அரசாங்கத்தார் சிற்றூர்களில் கூட்டுறவுச்

சங்கத்தை ஏற்படுத்தி, உதவி செய்கின்றனர். ஒரு சிற்றூரில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமானல், பதின்மராவது அதில் சேர்பவராயிருத்தல் வேண்டும். அவர் அனைவரும் ஒரே ஊரில் குடியிருப்பவரா யிருத்தல் வேண்டும்; அருகில் உள்ள ஊரில் இருப்பவராயும் இருக்கலாம்.

செல்வரையும் கற்றவரையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்வது நல்லது. சங்கத்தில் சேருவோர் ஒவ்வொருவரும், குறிப்பிட்ட தொகையை முதலில் செலுத்தி, பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். சங்கத்தில் சேர்ந்திருக்கும் உறுப்பினர் எல்லாருங் கூடி, சங்கத்தை நடத்தி வருவதற்காகச் சிலரை ஒரு சபையாக ஏற்படுத்துவார்கள். அந்தச் சபையார் தங்களுக்குள் ஒருவரைச் செயலாளராக (செக்ரட்டரி) ஏற்படுத்திக்கொள்வார்கள். கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் முதலியவை சபையாரின் வேலை. அங்கத்தினர் கொடுத்த பங்குத் தொகையையும், அரசாங்கத்தார் கொடுக்குந் தொகையையுங் கொண்டு கடன் கொடுப்பார்கள். செல்வர்கள் தங்கள் பணத்தை இந்தச் சங்கத்தில் வட்டிக்குக் கொடுத்து வைப்பார்கள். அதற்கு வட்டி குறைவாயிருக்கும்.

பழைய கடனைத் தீர்ப்பதற்கும், உழவுத் தொழில், வாணிகம் முதலியன செய்வதற்கும் சங்கத்திலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம். வாங்கும் பணத்தைச் சிறிது சிறிதாகப் பல தடவைகளில் கொடுக்கலாம். வட்டியும் குறைவானதே.

சங்கத்தின் உறுப்பினருள் ஒருவர் வாங்கின கடனைக் கொடுக்க இயலாவிடின், அதனைச் சங்கத்தின் உறுப்பினர் எல்லாரும் சேர்ந்து கொடுக்க நேரும். ஆதலால், சங்கத்தார் கடன் கொடுக்கும் போது, கடன் வாங்குபவரின் செல்வநிலைமையை நன்கு கவனிக்கவேண்டும். சில சங்கங்கள் அவ்வாறு கவனிக்காமல் கடன் கொடுத்துவிடுகின்றன. அதனால் பின்பு, உறுப்பினர் பலர் துன்பப்படுகின்றனர். அது கருதி, சிலர் கூட்டுறவுச் சங்கங்களே வேண்டா என்கின்றனர்; சிலர் அதில் உறுப்பினராகச் சேர்தற்கு அஞ்சுகின்றனர். ஆதலால், சங்கத்தின் முக்கிய அலுவலாளர்கள் கடன் வாங்குபவரைப்பற்றி நன்றாகக் கேட்டு அறியவேண்டும்; அவர்கள் நிலைமையை அடிக்கடி கவனித்துவரல் வேண்டும்.

நாம் நமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைக் கடைகளில் வாங்குகின்றோம்; அவற்றால் வரும் ஊதியத்தைக் கடைக்காரர் அடைகின்றனர். நாம் எவ்வளவு விலை கொடுத்தாலும், சில பொருள்கள் நல்லவையாயும் கலப்பில்லாதவையாயும் கிடைத்தல் இல்லை. வெண்ணெய், நெய், எண்ணெய் இவை நல்லவையாகக் கிடைப்பது அருமை. ஊரிலிருப்பவர் எல்லாரும் ஒரு சங்கமாகச் சேர்ந்து, ஒரு பங்குக்கு ஐந்து ரூபாய் வீதம் முதற்பொருள் சேர்த்து வாணிகம் நடத்தலாம். அப்பொழுது நல்ல பொருள்கள் கிடைக்கும். அவற்றால் வரும் ஊதியமும் தங்களுக்கு வரும். இவ்வாறு, சென்னப்பட்டணம் முதலிய நகரங்களில் நடைபெறுகின்றது.

உழுதொழிலுக்கு வேண்டும் பொருள்களை வாங்குவதற்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொள்ளலாம். உழவுக்கருவிகள், எரு, வித்து, முதலியவற்றைச் சங்கத்தின் மூலம் தருவிக்கலாம். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றைத் தனித் தனியே கொள்வதினினும், பலர் ஒருங்குகூடித் தங்கட்கு வேண்டியவற்றைத் தருவித்தால் குறைந்த விலைக்குக் கிடைக்கும்; நல்ல பொருள்களாயும் இருக்கும். இத்தகைய சங்கங்கள் பிறநாடுகளில் சிறந்த செயல்களை ஆற்றிவருகின்றன.

உழவர்கள் தங்கள் பொருள்களை விற்பனை செய்தற்கும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொள்ளுதல் நலம். அப்படிப்பட்ட முறை இல்லாததனால், விளைபொருள்களை வாங்கும் பெரிய வணிகருக்கும் உழவருக்கும் இடையே ஊதியம் அடைவோர் பலர் இருக்கின்றனர். பெரிய வணிகர்கள் உள்ளூர்ச் சிறுகடைக்காரர்கட்குப் பணங்கொடுக்கிறார்கள். உழவர்கள் வரிக்கும் செலவுக்கும் உள்ள பணமுடையினால் அவர்களிடம் தலைவிலைக்கும் குறைவாகப் பேசி முன்பணம் வாங்குகிறார்கள். பேசினபடியே குறைந்த விலைக்குக் கொடுத்துவிட வேண்டியதா யிருத்தலின், ஏறிய விலைக்கு விற்க முடிகிறதில்லை. உழவர்கள் விளைபொருள்களை விற்பனைச் சங்கத்தின் மூலம் விற்பார்களாயின், அதிக ஊதியத்தை அடையலாம். 'கொண்டுகட்டி'-கள், பெரிய வணிகர்கள் முதலியோர் அடையும் ஊதியம் உழவர்களே அடையவேண்டும்.

இனி, மக்களுக்குப் பயன் தரும் பசு, எருமை இவைகளை நன்கு வளர்த்து, பால், நெய் முதலியவற்றையும் சங்கங்களின் மூலம் விற்பனை செய்யலாம். எந்தப் பொருளாயினும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விற்றலும் வாங்குதலும் ஊதியமேயாகும்.

நமது தென்னாட்டில் இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்துவதற்காக முதன் முதலில் உழைத்தவர் திரு. ஆதிநாராயண செட்டியார் என்னும் பெரியார். அவருடைய பெருமுயற்சியின் பயனாக, சில இடங்களில் 'விளைபொருள் விற்பனைச் சங்கங்கள்' ஏற்பட்டு ஊதியம் கிடைக்கும் முறையில் நடைபெறுகின்றன. இத்தகைய சங்கங்களைப் பல ஊர்களிலும் அமைக்கவேண்டும்.

தொழிலாளிகள் பலரும் இவ்வாறு சங்கம் ஏற்படுத்தி நடத்திவரலாம். மாணாக்கரும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, தங்கட்கு வேண்டும் புத்தகம் முதலியவற்றைச் சங்கத்தின் மூலமாக வாங்கலாம். அதனால் வரும் ஊதியத்தை ஏழைமாணாக்கருக்குக் கொடுத்து உதவலாம்.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவோர் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்; தந்நலங் கருதுதல் கூடாது. நம் நாட்டு மக்களுள் பெரும்பாலோர் ஒருவரை ஒருவர் நம்புதல் இல்லை; நம்பினவர்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி நடத்தலும் இல்லை. அதனால், நம் நாட்டில், மக்கள் பலர் ஒருங்குசேர்ந்து தொழில் நடத்துதல் இல்லை; நடத்துந் தொழிலும் பெருகுதல் இல்லை.

இங்கிலாந்து முதலிய நாடுகளில், பலர் ஒருங்குகூடி, முதற்பொருள் வைத்துப் பெரிய தொழில்நிலையங்களையும் வாணிகங்களையும் நடத்து-கின்றனர். அதனால் அவர்களுக்கு மிக்க ஊதியம் கிடைக்கின்றது. மேல் நாட்டார் வாணிகத்தில் நம்-பிக்கையும் உண்மையும் உடையவராய் இருக்கின்-றனர். அவர்கள் பொய் சொல்வது மிக்க இழிவான செயல் என்று கருதுகிறார்கள். நம் நாட்டவரும் அவர்களைப்போல உண்மையும் நம்பிக்கையும் உடையவர்களாகி, கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி நடத்துவார்களானால், மிக்க ஊதியத்தை அடையலாம்; நமது நாடும் செல்வம் மிக்கது ஆகும்.

### வினாக்கள்

1. சிலர் உழவுத்தொழிலை விட்டுவிடுவதற்குக் காரணம் என்ன?

2. கூட்டுறவுச் சங்கம் நடைபெறுவது எப்படி?

3. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மை என்ன?

4. சங்கத்தின் முக்கிய அதிகாரிகள் கவனிக்கவேண்-டியது யாது?

5, கூட்டுறவுச் சங்கத்தினால் வேறு என்ன என்ன நன்மைகளை உண்டாக்கலாம்?

# 8. குருவும் மாணுக்கரும்

ஓர் ஊரில் 'பரமார்த்த குரு' என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கு மட்டி, மடையன், மிந்தன், மூடன், பேதை என்று ஐந்து மாணுக்கர்கள் உண்டு. ஒருநாள் குருவும், மாணுக்கர் ஐவரும் ஆக அறுவ-ரும் நெடுந்தொலேவிலிருந்த ஓர் ஊருக்குச் செல்-லப் புறப்பட்டார்கள். பகல் முழுவதும் நடந்தும், அவர்களால் பாதியளவே கடக்க முடிந்தது. அத-ணுல் அன்று இரவிலும் நடக்க முடிவு செய்து, அறு-வரும் நடந்தனர். இடையில் ஓர் ஆறு குறுக்கிட்டது. ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

அதனேக் கண்ட மட்டி என்பவன் அவர்-கள் எல்லோரையும் நோக்கி, 'ஐயன்மீர், இந்த ஆற்றின் கொடுமையைப்பற்றி என் பாட்டனுர் பலமுறை சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் ஒரு பெரிய வணிகர். ஒருநாள் அவர் தம் நண்பருடன் அடுத்த ஊருக்குச் சென்று இரண்டு உப்பு மூட்டை-களே வாங்கி, இரண்டு கழுதைகள் மீது ஏற்றிக் கொண்டு வந்தார். இந்த ஆற்றைக் கடக்குங்காலத்-தில், வெயிலின் கொடுமையைத் தணித்துக்கொள்ள, இடுப்பளவு நீரில் நின்று முதலில் தாம் குளித்தார்; பின்னர், கழுதைகளேயும் குளிப்பாட்டினுர். பிறகு அக்கரைக்குச் சென்று பார்த்தார். சந்துபொந்து இல்லாமல் ஊசியினுல் தைக்கப்பட்டிருந்த அச்சாக்-குப் பைகளின் வாய் சிறிதும் திறவாமலிருக்க, உள்ளே வைத்திருந்த உப்பையெல்லாம் இந்த ஆறு தின்று விட்டதைக் கண்டார். அவர் நண்பர் அதற்-காக வருந்தாமல் 'உப்புப் போனுல் போகிறது. உப்-பைப்போல் நம்மையும் தின்னுமல்விட்டதே! இதுவே

போதும்' என்று மகிழ்ச்சி யடைந்தார். இருவரும் ஊர் வந்து சேர்ந்தனர்' என்ருன்.

அதைக் கேட்ட குரு ஆறு விழித்துக் கொண்டிருக்கிறதா, உறங்கிக்கொண்டிருக்கிறதா என்று பார்த்து வரும்படி ஒருவனை அனுப்பினுர்.

அந்த மாணுக்கன், வெளிச்சத்துக்கெனத் தான் கொண்டு வந்த கொள்ளிக்கட்டையைத் தண்ணீரில் தோய்த்தான். உடனே தண்ணீர் 'சுறீர்' என்று இரைந்தது. அதனைக் கண்ட அவன் பதறிக் கீழே விழுந்து, பிறகு மெதுவாக எழுந்து, அஞ்சிக்கொண்டே குருவிடம் சென்று "குருவே! ஆறு விழித்திருக்கிறது. நான் கொள்ளிக்கட்டையை ஆற்றில் தோய்த்த போது அது சீறிக் கோபித்தது. நான் ஓடி வந்துவிட்டேன்" என்ருன்.

அதனைக் கேட்ட குரு "மாணுக்கர்களே! இது பொல்லாத ஆறு. ஆகையால் இது உறங்குகிற வரையில் நாம் அந்த மரத்தின் அடியில் தங்கியிருப்போம்" என்று சொல்லி மாணுக்கர்களுடன் சென்று அருகில் இருந்த ஒரு மரத்தினடியில் தங்கியிருந்தார்.

நீண்ட நேரம் கழிந்தபின் குரு அம் மாணுக்கனை அழைத்து "இப்பொழுது ஆறு உறங்கிக் கொண்டிருக்கிறதா, விழித்துக்கொண்டிருக்கிறதா? என்று நீ போய் ஆராய்ந்து வா" என்று சொல்லி அனுப்பினுர்.

அவன் அவிந்துபோன பழைய கொள்ளிக்கட்டையை எடுத்துச் சென்று தண்ணீரில் தோய்த்தான். இரைச்சல் ஒன்றும் எழவில்லை. ஆசிரியரிடம் மீண்டுவந்து, "குருவே! ஆறு ஆழ்ந்து உறங்குகிறது. இதுதான் ஆற்றினைக் கடக்கத்தக்க தருணம். புறப்படலாம்" என்றான்.

அறுவரும் விரைவாக எழுந்து, ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினர்; தண்ணீரில் அலை யெழாதபடி, மெதுவாகக் காலைத் தூக்கி ஒவ்வோர் அடியாகத் தண்ணீருக்குள் வைத்து ஆற்றினைக் கடந்து கரையேறினார்கள்.

கரையேறியதும் மூடன் என்ற மாணுக்கன், "நாம் எல்லாரும் இருக்கிறோமா என்று எண்ணிப்பார்க்கவேண்டும்" என்று சொல்லி, தன்னைக் கூட்டிக் கொள்ளாமல் மற்றவர்களை எண்ணினான். எண்ணினபோது ஐந்துபேர்களே இருக்கக் கண்டு, "ஐயையோ! ஐந்து பேர்கள்தாமே இருக்கிறோம். ஒருவரை ஆறு விழுங்கிவிட்டதே!" என்று குருவிடம் சொல்லித் தேம்பித் தேம்பி அழுதான்.

அவனுக்குப் பிறகு எண்ணத் தொடங்கிய ஒவ்வொருவனும், தன்னை விட்டுவிட்டு மற்றவர்களையே எண்ணியதனால் கடைசிவரையில் ஐவரே கணக்கில் அகப்பட்டனர். அதனால் அறுவரில் ஒருவரை ஆறு விழுங்கிவிட்டதாக அவர்கள் உறுதிப்படுத்திக்கொண்டு அழத்தொடங்கினர். பின்பு குரு ஐவரையும் வரிசையாக நிறுத்தித் தாமே

எண்ணிக் கணக்குப்பார்த்தார். அப்படி எண்ணும்போது குருவும் தம் மாணுக்கரைப் போலவே தம்மை எண்ணிக்கொள்ளாமல் மற்றவர்களையே எண்ணினுர். ஐவரே இருக்கக் கண்டு குருவும் அழலானுர்.

அப்போது அங்கு வந்த வழிப்போக்கன் ஒருவன் அவர்களை நோக்கி, "ஏன் அழுகிறீர்கள்?" என்று வினவினுன். அவர்கள் நிகழ்ந்த துக்கச்செய்தியைச் சொன்னுர்கள். அவர்களது அறியாமையை ஒரே கணத்தில் அறிந்துகொண்ட அவ்வழிப்போக்கன், அவர்களை நோக்கி, "நான் ஒரு மந்திரவாதி. நான் சொல்கிறபடி நீங்கள் கேட்க உடம்பட்டால் ஆறு கொண்டுபோனவனை நான் இங்கு மீட்டுக்கொடுப்பேன். நான் என் கையிலுள்ள பிரம்பால் ஒவ்வொருவர் முதுகிலும் ஓர் அடி அடிப்பேன். முதலில் அடி கொள்கிறவர் ஒன்று என்றும், இரண்டாவது அடிபடுகிறவர் இரண்டு என்றும், இப்படியே எல்லாரும் முடியும் வரையில் எண் சொல்லவேண்டும்" என்ருன். அவர்கள் எல்லாரும் "அப்படியே செய்கிருேம்" என்ருர்கள்.

வழிப்போக்கன் அறுவரையும் வரிசையாக நிறுத்தினுன். தன் கையிலிருந்த பிரம்பால் முதலில் குருவின் முதுகில் ஓங்கி ஓர் அடி அடித்தான். அவர் வலி தாங்கமாட்டாமல், "அப்பாடா! 'ஒன்று'" என்ருர். இரண்டாவதாக அடி பட்டவன் "இரண்டு" என்ருன். மூன்ருவதாக அடி வாங்கியவன் "மூன்று" என்ருன்; இப்படியே வழிப்போக்கன்

ஒவ்வொருவரையும் அடித்து வந்தபோது கடைசி-யாக அடிவாங்கியவன் "ஆறு" என்ருன்.

ஒவ்வொருவனும், பிரம்படி தாங்காமல் தன் முதுகைத் தடவிக்கொண்டு வருந்தினன். ஆயினும் ஆறுபேர்களும் குறையாமலிருப்பதைக் கண்டு அவர்-கள் மகிழ்வுற்று வழிப்போக்கனுக்குத் தம் நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

### விளுக்கள்

1. ஆற்றின் கொடுமையைப் பற்றி மட்டி என்பவன் கூறியதை எழுதுக.

2. 'ஆறு விழித்திருக்கின்றது' என்று ஒரு மாணுக்கன் கூறியது எதனுல்?

3. தங்களுள் ஒருவனை ஆறு கொண்டு போய் விட்டது என்று அவர்கள் வருந்தியது எதனுல்?

4. வழிப்போக்கன் ஆறுபேர்களையும் காட்டிக் கொடுப்-பதற்கு என்ன செய்தான்?

### பயிற்சி

1. கீழ்க்காணுஞ் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

கால்நடை, பாட்டனுர், மூட்டை, மகிழ்ச்சி.

2. பின்வருந் தொடர்களைப் பிரித்து எழுதுக.
அக்கரை, வழிப்போக்கன், பிரம்படி.

### இலக்கணம்

1. நாம் தங்கியிருப்போம்.

2. நீ போய் ஆராய்ந்து வா.

3. வழிப்போக்கன் அவர்களை வரிசையாக நிற்கச்செய் தான்.

இவற்றுள், முதல் வாக்கியத்தில் 'நாம்' என்பது யாரைக்குறிக்கின்றது? பேசுகின்றவரைக் குறிக்கின்றது. பேசுபவனைக் குறிக்குஞ் சொல் **தன்மை யிடத்துச் சொல்** எனப்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள, 'நீ' என்பது பேசுபவனுக்கு முன் நிற்பவனைக் குறிக்கிறது. அதனால் இது **முன்னிலையிடத்துச் சொல்** ஆகும்.

மூன்றாவது வாக்கியத்தில் உள்ள 'வழிப்போக்கன்' என்பது பேசுபவனையும் முன்நிற்பவனையும் குறிக்கவில்லை. அதனால் இது **படர்க்கையிடத்துச் சொல்** எனப்படும்.

இவற்றால் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடம் மூவகைப்படும் என அறியலாகும்.

நான், நாம், நாங்கள், யான், யாம், யாங்கள்— இவை தன்மையிடத்துச் சொற்கள்.

நீ, நீர், நீவிர், நீங்கள்—இவை முன்னிலையிடத்துச் சொற்கள்.

மற்ற எல்லாச் சொற்களும் படர்க்கையிடத்துச் சொற்கள்.

---

## 9. பனை

பனைமரம் மிக்க உயரமாக வளரும். பனை மணற்பாங்கான இடங்களில் செழிப்பாய் இருக்கும். பனைமரத்துக்குக் கிளைகள் இல்லை. தென்னை, கமுகு முதலான மரங்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவையே.

பனைகளுள் கட்டுப்பனை, பருவப்பனை என இரண்டு வகை உண்டு. கட்டுப்பனையை ஆண்-பனை என்றும், பருவப்பனையைப் பெண்பனை என்றும் தமிழ்நாட்டில் வடபகுதியில் வழங்குகிறார்-கள். சிறிய பனையை வடலி என்று சொல்லுவார்கள். பருவப்பனைதான் காய்க்கும். அதன் உச்சியில் மட்டைகள் அடர்த்தியாய் இருக்கும்.

மழைக்காலங் கழிந்தபிறகு பனைமரங்களில் பாளை வரும். முதலில், கட்டுப்பனையில் பாளை தோன்றும். ஆனால், அது அநேக நாள் பலன்



கொடுக்காது. பாளை வளர்ந்த பிறகு அதனை அறுத்து இடுக்குவார்கள். இரண்டு மூன்று நாட்களில், அதி-லிருந்து துளி விழும். அப்பொழுது அதில் மண்-பாத்திரங்களைக் கட்டுவார்கள்.

பனஞ்சாற்றுக்குப் பதநீர் என்று பெயர். ஆனால், சிலவிடங்களில் பனஞ்சாறு என்றே வழங்குகின்றார்கள். இளங்காய்க்கு நுங்கு என்று பெயர். பிஞ்சுக்காயைக் குரும்பை என்று சொல்லு-வார்கள்.

பனைமரத்தின் எல்லா வுறுப்புக்களும் பயன்படும். பனையின் அடிமரம் வீடுகளுக்குப் பலவகையில் உதவுகின்றது. பனைமட்டையைக் கூரைவீடுகளில் வரிச்சாகப் பயன் படுத்துவது உண்டு. பச்சைமட்-டையின் இரண்டு பக்கங்களிலும் ஓரத்தில் உள்ள பகுதி நாராக உதவும். மட்டையின் உட்புறத்திலி-ருந்து நார் உரிப்பது உண்டு. அதற்கு 'அகணி' என்று பெயர். அகணிநாரைப் பல வகையில் பயன் படுத்துவார்கள். அது கூரையில் ஓலை கட்டுவதற்கு உதவும்; கட்டிலுக்கும் ஓலைப்பெட்டிகளுக்கும் பயன்-படும். காய்ந்த மட்டை விறகுக்கு உதவும்.

பனையோலையினால் கூரை வேயலாம்; பந்தல் போடலாம். பனையோலையைப் பட்டை பிடித்து, கிணற்றில் தண்ணீர் இறைப்பதற்குத் தோண்டி-யாகப் பயன் படுத்துகிறார்கள். பனையோலையினால் பலவகைப் பெட்டிகள், பாய்கள் முடைகிறார்கள். அதனால் இறைகூடை செய்வது உண்டு. வடலி-யோலையினால் விசிறி செய்கிறார்கள். முற்காலங்களில் பனையோலையை ஏடு செய்து அதில் எழுதிவந்தார்-கள்; இப்போதும் சில இடங்களில் பனையோலையில் எழுதுகிறார்கள்

பனைமரத்தில் பதநீர் இறக்குகிறார்கள். பாளையில் கட்டும் பாத்திரத்தில் சுண்ணாம்பு தடவிவந்தால், அதில் விழுஞ் சாறு பதநீர் ஆகும். பதநீர் மயக்-கத்தை உண்டாக்காது. அதைக் குடிப்பதில் கேடு உண்டாவது இல்லை. அதனால், பதநீரைப் பலரும் குடிக்கின்றனர். பதநீரைக் காய்ச்சினால் அது வெல்லம் ஆகும். கள்ளைக் காய்ச்சினால் வெல்லம் உண்டாகாது. பனைவெல்லம் இனிப்பானது. அதைச் சிலர் பணியாரங்களிலும் சேர்க்கிறார்கள். பனைவெல்-லத்தைக் 'கருப்பட்டி' என்று வழங்குகிறார்கள்.

பனங்காய்களுள் இளங்காயில் நுங்கு இருக்கும். இள நுங்கில் இனிய நீர் இருக்கும். பனைநுங்கு குளிர்ச்சியானது. அதனால், கோடைக்காலத்தில் நுங்கைத் தின்கிறார்கள். நுங்கு முற்றினால் காய் ஆகிவிடும். பனம்பழத்தைச் சுட்டும் அவித்தும் தின்பார்கள். பனங்காய்களில் ஒன்று முதல் மூன்று கொட்டைகள்வரை இருக்கும். சில காய்களில் நான்கு கொட்டைகளும் அருமையாகக் காணப்-படும். பனங்கொட்டைகளைத் தரையில் புதைத்தால், அதிலிருந்து கிழங்கு விழும். பனங்கிழங்கைச் சுட்-டும் வேகவைத்தும் தின்பார்கள். அவித்த கிழங்கை வெல்லஞ் சேர்த்து இடித்துத் தின்பார்கள். அதை உலர்த்தி இடித்து மாவாக்கி, சர்க்கரை சேர்த்துத் தின்பதும் உண்டு.

**வினாக்கள்**

1. பதநீர், குரும்பை, அகணி இவை எவற்றிற்குப் பெயர்?

2. பனையோலையினுல் என்ன பயன்?

3. பனஞ்சாற்றைப் பதநீராக இறக்குவது எப்படி?

4. அகணி, பனங்கிழங்கு இவைகளின் பயன் என்ன?

பயிற்சி

1. செழிப்பாய், பலவகையில், வரிச்சு, வேயலாம்— இச்சொற்களை அமைத்துச் சொற்ருெடர் எழுதுக.

2. மணற்பாங்கு, பனஞ்சாறு, பனையோலை, முற்காலம். —இவற்றைப் பிரித்தெழுதுக.

3. உயரமாக, ஓரத்தில், கேடு, இனிப்பானது, குளிர்ச்சியானது, கோடைக்காலம்—இவற்றிற்கு எதிர்ச்சொற்கள் எழுதுக.

---

# 10. நகர வாழ்க்கையும் நாட்டு வாழ்க்கையும்

(உரையாடல்)

நம்பி—நாகா, வணக்கம். உன்னை இந் நகரத்தில் பார்த்துப் பலநாள் ஆயிற்றே.

நாகன்—வணக்கம், நம்பி. நான் இங்கு ஒரு வேலையாக இன்று காலை வந்தேன்; வேலை முடிந்தவுடன் இன்று மாலையே என் ஊருக்குத் திரும்பிவிடுவேன்.

நம்—இங்குத் தங்கியிருக்கலாகாதோ?

நா—நகர வாழ்க்கையை நான் விரும்புவதில்லை. எங்கும் ஒரே புகைபடிந்த காற்றும், கூச்சலும், குழப்பமுந்தான் காணப்படும். எனக்குத் தூய்மையான காற்றும் அமைதியும் வேண்டும்.

நம்—இங்கு நல்ல காற்று இல்லை. இது சரிதான். ஆனால், கூச்சலைப்பற்றிக் கூறினையே; சில நாள் இங்கிருந்தால், அது பழகிப்போய்விடும். பட்டிக்காட்டில் என்னால் இருக்கவே முடியவில்லை. அங்கு வந்தால், எனக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் இருக்கும். நகரத்தில் உள்ள காட்சிகளும் கூட்டமும் நாட்டுப்புறத்தில் இருக்குமா?

நா—நம்பி, நீ சொல்வது வியப்பாய் இருக்கிறதே. நகரத்தில் எங்குப் பார்த்தாலும் குப்பையுள்ள தெருக்கள்! ஆலைகளின் புகைக்கூண்டிலிருந்து மேகம்போன்ற புகை! பார்க்கத்தகாத விளம்பரப் படங்கள்! என் ஊரில் பச்சைப்பசேல் என்று இருக்கும் நெல்வயல்களும், புல்வெளிகளும், நிழல் மிக்க சோலைகளும், பூந்தோட்டங்களும், ஆற்றங்கரையும், மலைச்சாரலும் கண்ணைக் கவருமே! இயற்கையழகே அழகு!

நம்—வயலையும் மலையையும் ஒரு முறை பார்த்தால் போதாதா! நாள்தோறும் பார்ப்பதற்கு அதில் என்ன இருக்கிறது?

நா—ஐயோ, பாவம்! உனக்கு அவைகளின் அருமை தெரியவில்லை! இயற்கைக் காட்சியில் எத்-

146926

தனையோ புதுமைகளைக் காணலாம்! காணக் கண்-மட்டும் வேண்டும்.

நம்—நாட்டுவாழ்க்கை உயிரற்ற வாழ்க்கை. நாடகம், படக்காட்சி, சொற்பொழிவு, வானொலி, பாட்டுக்கச்சேரி ஏதாவது அங்கு உண்டா?

நா—மற்றவை இல்லாவிடினும் வானொலி இருக்-கின்றது. அதன் மூலம் நீ சொன்ன எல்லாவற்றையும் கேட்டு மகிழ்கின்றேன். இனி, அரசாங்கத்தார் நம் நாட்டில் பெரும்பாலும் ஒவ்வோர் ஊரிலும் வானொலி அமைத்துவிடுவர். சிற்றூரில் இருந்துகொண்டே நீ சொல்லும் நகரநன்மைகளை அடையலாம். ஆனால் சிற்றூரில் உள்ள இன்பம் நகரத்தார்க்குக் கிட்டுமா? ஒழிந்தவேளையில் நான் தோட்டத்தில் வேலைசெய்-வேன்; வேட்டையாடுவேன்; குன்றின்மேல் ஏறி இயற்கை யழகைக் கண்டு மகிழ்வேன்; ஆற்றில் குளித்து நீந்துவேன்; இரவில் நல்ல இலக்கியங்களைப் படிப்பேன். என் வாழ்நாள் இன்பமாய்க் கழிகிறது.

நம்—நாகா, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை பிடிக்கும். எனக்கு உன் வாழ்க்கை எழுச்சி இல்லாததாகத் தோன்றுகிறது.

நா—எழுச்சி உண்டோ, இல்லையோ; நான் நோய்நொடி இல்லாமல் நலமாய் இருக்கிறேன். நக-ரத்தில் விரைவில் பரவும் கொள்ளைநோயும், ஆயிரக்-கணக்கான பிணிகளும் அங்கு இல்லை. எங்கள் எளிய வாழ்க்கை எங்களுக்கு நீண்ட வாழ்நாளைத் தரு-கின்றது.

நம்—அது உண்மை. நகரமக்களைவிட நாட்டு-மக்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர். ஆனால், வேண்டும் பொருள்கள் விரைவில் இங்குக் கிடைப்பதுபோல அங்குக் கிடைக்குமா?

நா—நான் இருக்கும் ஊர் நகரத்துக்கு அருகில் உளது. போக்குவரவுக்குப் புகைவண்டி முதலியவை இருக்கின்றன. எந்தப் பொருளும் எளிதில் கிடைக்-கும். எனக்குச் சொந்த வீடு இருக்கின்றது. அதனால் வீட்டு வாடகை இல்லை. கறிகாய், பால், தயிர் இவை மிக மலிவாய்க் கிடைக்கும்; நல்ல நீர்வசதி உண்டு. வீண் செலவுக்கு இடமே இல்லை. சிற்றூர் வாழ்க்கை ஆரவாரமில்லாத எளிய வாழ்க்கை; அமைதியையும் இன்பத்தையும் தரும் வாழ்க்கை. இப்போது அர-சாங்கத்தார் நம் நாட்டில் சிற்றூர்கள் விரைவில் முன்னேற்றம் அடைவதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்; நகரங்களில் மக்கள்-தொகையைக் குறைக்க வழி துறைகளை ஆராய்கின்-றார்கள். இருக்கட்டும், நீ என் ஊருக்கு ஒருமுறை வா. பின்பு, உன் கருத்தை எனக்குச் சொல்லு.

நம்—நாகா, நான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகிறேன். வணக்கம்.

### வினாக்கள்

1. நகர வாழ்க்கையை நாகன் ஏன் விரும்பவில்லை?
2. சிற்றூரில் காணும் இயற்கைக் காட்சிகள் யாவை?
3. நாட்டு வாழ்க்கை அமைதியான வாழ்க்கையாகும்: எப்படி?

பயிற்சி

கீழ்க்காணும் பொருள்கள் பற்றி உரையாடல் கட்டுரை எழுதுக.

1. வேடனும் உழவனும் தத்தம் தொழிலின் மேன்மையைக் கூறல்.

2. உடற்பயிற்சி செய்யாமல் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்கும் முருகனும், படிக்காமல் எப்பொழுதும் விளையாடிக்கொண்டே இருக்கும் பால் என்னும் மாணக்கனும் உரையாடல்.

---

# 11. நட்பின் பயன்

ஒரு நாள் காலையில் வேடன் ஒருவன் கோதாவரி யாற்றங்கரையை அடைந்தான்; அங்கு ஒரு பெரிய வன்னிமரத்தின் அடியில் வலையை விரித்து, பல வகை உணவுப் பொருள்களைத் தெளித்துவிட்டு, செடிகளின் மறைவில் பதுங்கியிருந்தான்.

சிறிது நேரத்தில், சித்திரக்கிரீவன் என்னும் புருவரசு தன் கூட்டத்தோடு அங்கு வந்து இறங்கிற்று. அது அங்கு இறைந்துகிடக்கும் நெல் முதலியவற்றைப் பார்த்து, புருக்களை நோக்கி, "மானிடர் இல்லாத இக்காட்டில் இவை எவ்வாறு வரும்! இதனை ஆராய்ந்தறிந்துதான் தின்னவேண்டும். சிறிது பொறுத்திருங்கள்" என்றது. அச்சொல்லைக் கேட்டு ஒரு புரு, "இப்படி எண்ணினால் நமக்கு ஓர் இரையும் அகப்படாது. தீராத ஐயம் உள்ளவர்,

வெட்கப்படுகின்றவர், பொறுமை உள்ளவர், பிறர் பொருளால் வாழ்பவர் ஆகிய இவர்கள் துன்பமே அடைவார்கள். ஆதலின், இவ்வுணவைப்பற்றி ஐயுறல் தகாது" என்று செருக்கோடு கூறிற்று. அதனைக் கேட்டு எல்லாப் புருக்களும் அவற்றைத் தின்னப் போயின; போய் வலையில் அகப்பட்டுக் கொண்டன. புருவரசன், 'என் சொல்லைக் கேட்காமல் எல்லாப் புருக்களும் வலையில் அகப்பட்டனவே! நான்மட்டும் தனியே இருப்பதனால் பயன் என்ன ?' என்று எண்ணி அதுவும் வலையில் அகப்பட்டது.

பறவைகள் வலையில் அகப்பட்டதனை வேடன் கண்டு, மறைவிலிருந்து வெளிப்பட்டு, அவ்விடத்திற்கு வரலானான். அவன் வருதலைக் கண்ட புருக்கள் தம் அரசனை நோக்கி, "உன்சொல்லைக் கேட்காததனால் இவ் விடையூறு நேர்ந்தது!" என்று வருந்தின. புருவரசன், "இப்பொழுது இதைச் சொல்லுதலால் பயன் யாது? நான் ஒன்று சொல்லுகிறேன். அப்படிச் செய்வீர்களானால் பிழைக்கலாம். நாம் எல்லோரும் ஒருங்கே இவ்வலையோடு பறந்து சென்று, வேறிடத்தை அடைய வேண்டும்" என்றது. உடனே அவையெல்லாம் அவ்வாறே ஒருமித்து வலையோடு பறந்து சென்றன.

அச் செயலைக் கண்ட வேடன், "இவை எப்போதாகிலும் தம்முள் மாறுபாடு அடையும். அப்போது இவற்றைக் கைப்பற்றலாம்" என்று கருதிப் பின் தொடர்ந்தான். ஆனால் பறவைகள் விரைந்து சென்றுவிட்டன. அதனால் வேடன்



வருந்தி மீண்டான். புருவரசன் தன் கூட்டத்தைப் பார்த்து, "கண்டகியாற்றின் கரையில் சித்திரவனத்தில் என் நண்பன் இரணியகன் என்னும் எலியரசன் இருக்கிறன். அவனிடம் செல்வோம். அவன் வலையை அறுத்து நம்மை விடுவிப்பான்" என்றது. அவ்வாறே பறவைகளெல்லாம் சென்று எலியரசன்பால் இறங்கின.

இடையூறு நேருங் காலத்தில் தப்பித்துக்கொள்வதற்காகத் தன் வளைக்குள் நூறு வழி செய்துகொண்டு உள்ளேயிருந்த எலியரசன், புருக்கள் இறங்கின ஓசையைக் கேட்டு, அடங்கியிருந்தது. அப்போது சித்திரக்கிரீவன், "நண்பனே, வெளியே வந்து எங்களோடு பேசலாகாதா!" என்றது. அவ்வொலியைக் கேட்ட எலி, அது தன் நண்பன்குரல் என்று அறிந்து மகிழ்வுடன் வெளியே வந்து, நண்பனுக்கு முகமன் சொல்லிற்று. உளம் ஒத்த நண்பரோடு உரையாடி மகிழ்வதினும் வேறே இன்பம் ஏது?

எலி, புருவின் நிலைமையைப்பார்த்து, துன்புற்று வருந்தி, "நீ மற்றையோரினும் அறிவுமிக்கவன் அல்லவா! உனக்கு இத்துன்பம் எப்படி நேர்ந்தது?" என்று வினவியது. அப்பொழுது புரு, "எந்தக் காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும். ஊழ் வலியது. அதன்முன் யாருடைய அறிவும் செல்லாது" என்றது. அதைக் கேட்ட இரணியகன், "இது உண்மையே. நூறு நாழிகைவழித் தொலைவிலிருந்தே பொருள்களைத் தெரிந்துகொண்டு

போகும் நீ இன்றைக்கு இவ்வலையில் சிக்கிக் கொண்டாயே!'' என்று சொல்லி, சித்திரக்கிரீவன் கட்டுண்ட வலைக்கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்பொழுது சித்திரக்கிரீவன், ''நண்ப, முதலில் என்னைச் சேர்ந்தவரின் வலையை அறு. அதன் பின், என் வலையை அறு'' என்று கூறிற்று. அதற்கு எலி, ''என் பல் மென்மையானது. அதனால் இவர்கள் எல்லோருடைய கட்டையும் அறுக்க முடியாது. ஆதலின், முதலில் உன் தளையை அறுக்கின்றேன்; பின்னர், என் திறமைக்கு இயன்றவாறு மற்றையோர் தளையை அறுக்கின்றேன். ஒருவன் தன்னைக் காத்துக்கொண்டு, பின்பு தன் சுற்றத்தைக் காக்க வேண்டும்; தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டால், அறம் பொருள் இன்பம் வீடு இவைகளை அடையலாம்'' என்றது.

புருவரசன் இரணியகனைப் பார்த்து, ''நீ சொல்லும் அறிவுரை சரிதான். ஆயினும், துன்பத்தினின்றும் காப்பதற்காகத்தானே இவர்கள் என்னை அரசனாகக்கொண்டுள்ளனர்? ஆதலால் நான் இவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளேன். முதலில் இவர்களை விடுவி'' என்று வேண்டிக்கொண்டது. அதைக் கேட்ட இரணியகன் ''நீ பெருந்தகைமை உள்ளவன்; அடுத்தவர்களை ஆதரிக்குங் குணம் உடையவன். அரசனிடத்தில் அன்புள்ள குடிகளும், குடிகளிடத்தில் அன்புள்ள கொற்றவனும் நன்மை அடைவார்கள்'' என்று சொல்லி, எல்லாப் புருக்களின் கட்டையும் அறுத்து, கடைசியில் சித்திரக்கிரீவன் தளையையும் அறுத்தது.

அதன் பின் நண்பர்கள் இருவரும் அளவளாவி உரையாடினர். பின்னர், புருவரசன் நண்பனிடம் விடைபெற்றுக்கொண்டு, தன் இனத்தவருடன் இருப்பிடத்திற்குப் போய் இனிது வாழ்ந்திருந்தது.

### வினாக்கள்

1. சித்திரக்கிரீவன் உணவுப் பொருள்களைப் பார்த்த-பொழுது புருக்களுக்குக் கூறிய அறிவுரை யாது?

2. ஒரு புரு செருக்கோடு என்ன கூறிற்று?

3. எலியரசன் நன்குணம் எதனால் விளங்குகிறது?

4. எலியரசன் சித்திரக்கிரீவனை எவ்வாறு பாராட்டிற்று?

### இலக்கணம்

வேடன் புருக்கள் சிக்கிக்கொண்டன வலையில் விரித்த. இந்தத் தொடர்மொழியில் பொருள் நன்கு விளங்குகின்றதா? இல்லையன்றோ? இந்தத் தொடரையே,

வேடன் விரித்த வலையில் புருக்கள் சிக்கிக் கொண்டன என்று கூறின் பொருள் நன்கு விளங்குகிறது.

இவ்வாறு ஒரு கருத்து அமைதியாய் அமைந்திருக்கும் தொடர்மொழிக்குச் **சொற்றொடர் (வாக்கியம்)** என்று பெயர்.

இந்தப் பாடத்திலிருந்து ஆறு சொற்றொடர்களை எடுத்து எழுதுக.

---

## 12. பொங்கல்

நாம் கொண்டாடும் விழாக்களுள் பொங்கல் விழாவும் ஒன்று. தைத்திங்கள் முதல்நாள்அன்று பொங்கல் விழாக் கொண்டாடுகிறோம். அது ஏன் ?

சூரியன் கிழக்கில் வடபகுதியில் ஆறு திங்களும், தென்பகுதியில் ஆறு திங்களும் தோன்றுகின்றான். சூரியன் வடபகுதியில் இருக்கும் ஆறுதிங்கட்-காலத்தை உத்தராயண காலம் என்றும், தென்-பகுதியில் இருக்கும் ஆறுதிங்கட் காலத்தைத் தட்சிணாயன காலம் என்றும் வழங்குகின்றோம். தட்சிணாயன காலத்தில் மழை சொரியும்; வாடை-வீசும்; குளிர் தாக்கும்; பனி வருத்தும். வட இந்தியாவில் பனியும் குளிரும் மிகுதி. அவற்றால் அங்கே மாந்தர் பெரிதும் வருந்துவர்.

மழை, பனி, குளிர் இவற்றால் வருந்தும் மனிதர் வெயிலை வேண்டுதல் இயல்பே. ஆதலின், ஞாயிறு வடபகுதியில் வரும் நாளை எதிர்நோக்கியிருப்பர்; அதனால், உத்தராயணத்தின் முதல்நாளைக் கொண்-டாடலாயினர். அன்றியும், மழைக் காலத்தில் குடி-யானவர்கள் பயிர் இடுகின்றனர். நெல் முதலியன முற்றி விளைவடைகின்றன. நமது தமிழ்நாட்டில் மார்கழித்திங்களின் கடைசியிலும், நெல் அறுவடை-யாகும். மழைக்குக் காரணமாய் இருக்கின்ற சூரிய-னுக்கு, முதல்முதல் அறுவடையான நெல்லின் அரிசியைப் பொங்கலிட்டுப் படைத்து வணங்கு-கின்றனர். அதுவே பொங்கல்விழா என்று வழங்கு-வது. இது சிறந்த செயல் அன்றோ ?

பொங்கல் விழாவிற்கு முதல்நாள் 'போகிப் பண்டிகை' கொண்டாடுகிறோம். அது இந்திரனைக் குறித்துக் கொண்டாடப்படுகிறது. மேகங்களுக்குத் தலைவன் இந்திரன் என்று முற்காலத்தில் எண்ணியிருந்தனர். இந்திரனைக் கொண்டாடினால், அவன் நன்றாக மழை பொழியும்படி கார்முகில்களுக்குக்



கட்டளையிடுவான் என்பது நம்பிக்கை. வேண்டுங்காலத்தில் மழை பெய்வித்த இந்திரனுக்கு விழாச் செய்வித்தனர். இது செய்நன்றி அறியுஞ் சிறந்த குணம் அல்லவா ?

வட இந்தியாவில் உள்ள ஆயர்பாடியில், முற்காலத்தில் வாழ்ந்திருந்த ஆயர்கள் இந்திரனுக்குப் பூசனை செய்துவந்தனர். அவ்வாறு நடைபெற்று வருகையில், கண்ணபிரான் அவர்களை நோக்கி 'இந்திரனுக்குப் பூசனை செய்வது ஏன்? நம் ஆனிரை-

களுக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றுவது "கோவர்த்தனம்" என்னும் மலையன்றோ? ஆகலின், அந்த மலைக்குப் பொங்கலிட்டுப் பூசனை புரிவது தக்கது' என்று கூறினர். அவர் சொற்படி ஆயர்கள் கோவர்த்தனமலைக்குப் பொங்கலிட்டு வணங்கினர். அதனால் இந்திரன் சினங்கொண்டான்; பெருமழை பெய்து ஆயர்பாடியை அழித்துவிடும்படி கார்முகில்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே அவை ஏழு நாட்கள் விடாது பெருமழை சொரிந்தன. அந்த மழையினின்று ஆயர்களையும் ஆக்களையும் கண்ணபிரான் காப்பாற்றினர். இந்திரன் தோல்வியுற்று, அவரை வணங்கிச் சென்றான். இந்தச் செய்தியினால் பண்டைக்காலம் முதற்கொண்டே இந்திரவிழா நடைபெற்று வருகின்றது என்பதை நாம் அறியலாகும்.

முற்காலத்தில், நமது தமிழ்நாட்டிலும் இந்திரவிழா நடைபெற்று வந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில், சித்திரைப் பௌர்ணமிமுதல் இருபத்தெட்டு நாட்கள் இந்திரவிழா நிகழ்ந்தது என்பது தெரிகின்றது.

உழுதொழில் நடைபெறுவதற்குக் காரணமாயுள்ள இந்திரனுக்கும் சூரியனுக்கும் பூசனை செய்வதுபோல, ஆனிரைகளுக்கும் பூசனை செய்கின்றனர். அதனை 'மாட்டுப் பொங்கல்' என்று வழங்குகின்றோம். பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் வைக்கிறார்கள். அன்று மாடுகளைக் குளிப்பாட்டுவர்; தொழுக்களில் பொங்கல் வைத்துப் பூசனை செய்-

வார்கள்; மாடுகளுக்குப் பழம் முதலிய சிறந்த உணவு கொடுப்பார்கள். சில ஊர்களில் 'மாடுபிடி' என்னும் பந்தயஆட்டம் சிறப்பாக நடைபெறும்.

பொங்கலுக்குச் சிலநாட்களுக்கு முன்னரே வீடு-களுக்கு வெள்ளையடிப்பார்கள்; பொருள்கள் எல்லா-வற்றையும் நன்ருகக் கழுவுவார்கள்; உதவாதபடி கெட்டுப்போன பொருள்களை அப்புறப்படுத்துவார்-கள்; பழைய மண்பாண்டங்களைக் கழித்துவிடு-வார்கள். கிழிந்த துணிகள், புறத்தே எறிந்த பொருள்-கள் இவற்றைப் பொங்கலின் முதல்நாள் இரவில் கொளுத்துவார்கள். அதனுல் தெருக்களும் தூய்மை-அடையும்.

பொங்கல் விழாவினுல் வீடு வாயில்கள், வீட்-டுப் பொருள்கள் தூய்மைசெய்யப்படுன்றன. மாந்தர் ஊக்கமும் உ.வகையும் உள்ளவராய் இருக்கின்றனர்; பொங்கலுக்கு மணமக்களை அழைத்து வந்து கோடி-யாடை அளித்து மகிழ்விக்கின்றனர். சில ஊர்களில், அன்று எல்லாரும் கோடியுடை உடுத்து, சிறந்த உணவு உண்டு இன்புறுகின்றனர்.

### வினுக்கள்

1. பொங்கற்பண்டிகை யாரைக்குறித்துச் செய்யப்படு-கின்றது?
2. சூரியனுக்குப் பொங்கல் இடுவது ஏன்?
3. போகிப்பண்டிகை என்பது என்ன?
4. மாட்டுப்பொங்கல் வைப்பது ஏன்?
5. பொங்கற்பண்டிகையின் நன்மை என்ன?

**இலக்கணம்**

மேகம் மழைபொழியும்

இதில், பொழியும் என்னுஞ் சொல் எதைக் குறிக்கிறது? மேகம் செய்யும் வேலையைக் குறிக்கின்றது அல்லவா? இவ்வேலையைச் செய்வது எது? மேகம் என்பது.

இவ்வாறு வேலை செய்யும் பொருள் **எழுவாய்** எனப்படும். எழுவாய் செய்யும் வேலையைக் குறிக்குஞ் சொல் **பயனிலை** எனப்படும்.—இச் சொற்றொடரில் மேகம் என்பது எழுவாய்; பொழியும் என்பது பயனிலை.

கண்ணன் காப்பாற்றினர்.

இச்சொற்றொடரில் கருத்து முடிந்திருக்கிறதா? இல்லை; கண்ணன் எதைக் காப்பாற்றினர் என்பது தெரியவில்லை. கண்ணன் பசுக்களைக் காப்பாற்றினர் என்றால் கருத்து முடிகின்றது. இதில் பசுக்கள் என்பது செயப்படுபொருள்.

---

# 13. உயிர்ச்சத்து

நாம் உயிர் வாழ்ந்திருப்பதற்கு இன்றியமையாத பொருள்களுள் உணவு ஒன்று என்பது உங்களுக்குத் தெரியும். உணவில் சத்துப்பொருள், மாவுப்பொருள், கொழுப்புப் பொருள், நெய் முதலியவை அடங்கியுள்ளன என்றும், அவை நமது உடல்வளர்ச்சிக்கும் நலத்திற்கும் வேண்டுமளவு நம் உணவில் சேர்ந்திருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதியிருந்தனர்; இப்பொழுது, வைட்டமின் என்னும் உயிர்ச்சத்து ஒன்றும் உணவுப் பொருளில் உளது என்று கண்டறிந்திருக்கின்றனர்.

வைட்டமினைக் கண்ணுற் காண முடியாது. அதன் எடையையும் அறிய முடியாது. அஃது எவ்வாறு உண்டாகின்றது என்பது இன்னும் நன்ருக விளங்கவில்லை. ஆனால், அது உடல்வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் இன்றியமையாதது என்றும், அது குறைந்தால் நோய்கள் உண்டாகும் என்றும் அறிந்திருக்கின்றனர்.

வைட்டமின் தானியம், கறிகாய் பழம் முதலிய விளைபொருள்களில் அடங்கியுளது; 'காட்லிவர்-ஆயில்' என்னும் மீன்நெய்யில் வைட்டமின் உளது. சிறு மீன்கள் பாசியையும், தண்ணீரிலிருக்கும் செடிகளின் இலை முதலியவற்றையும் தின்னும். அவ்வுணவினால் சிறுமீன்களுக்கு வைட்டமின் சத்துக் கிடைக்கின்றது. அந்த மீன்களைத் தின்பதனால், 'காட்' என்னும் மீனுக்கும் வைட்டமின் வருகின்றது. அதனால், அம்மீனின் நெய்யிலும் அச்சத்து அடங்கியுளது. பசுவின் பாலில் உள்ள வைட்டமின் பசு தின்னும் புல்லினின்று வந்ததுவே. அதனால்தான், காடுகளில் திரிந்து பசும்புல்லை மேயும் பசுவின் பாலில் வைட்டமின் அளவு அதிகமாயும், வீட்டிலே இருந்து வைக்கோலைத் தின்னும் பசுவின் பாலில் மிகக் குறைவாயும் உளது. இதனால், சென்னை முதலிய நகரங்களில் வீடுகளில் வளர்க்கும் பசுக்களின் பால் சரியான பயன் தருவதில்லை என்பது அறிதல் கூடும். பசுக்கள் தின்னும் உணவின் வேறுபாட்டால், அவற்றின் பால் தன்மையிலும் பயனிலும் வேறுபடுகின்றது.

வைட்டமினில் பலவகை உள்ளன. அவற்றை இப்போது ஆறு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவை ஏ, பி, ஸி, டி, இ, யப், என்று பெயர் பெறும். நாளடைவில் இன்னும் பலவகை உள என்று அறியப்படுதலும் கூடும்.

ஏ (A). இது உடம்பினையும் அறிவினையும் வளர்க்குந் தன்மையது; மூக்கு, காற்றுப்பை, தொண்டை இவற்றில் நோய் வாராமற் காக்க வல்லது. இது குறையுமாயின், கண்ணொளி மங்கும். மீன்நெய், பால், வெண்ணெய், நெய், கோழிமுட்டை, சில மீன்கள், புதிய இறைச்சி, கீரை இவற்றில் 'ஏ' என்னும் வைட்டமின் உளது. உணவுப் பொருளை அதிகமாக வேகவைத்தால் இச் சத்துக் கெட்டுவிடும். ஆதலின், அளவாக வேகவைப்பது நல்லது.

பி (B). இது உயிர் வாழ்விற்கும் நலத்திற்கும் இன்றியமையாதது. உணவுப் பொருள்களில் இது குறைந்தால், பசியின்மை, நரம்புத் தளர்ச்சி முதலியவை உண்டாகும். பால், புதிய இறைச்சி, கோதுமை, நெல்லரிசி, கேழ்வரகு, பழங்கள், கொட்டைகள் முதலியவற்றில் இச் சத்து உளது. இது நெல், கோதுமை முதலிய பொருள்களில் உமிக்குள், அரிசியின் மேலுள்ள தவிட்டில் இருக்கிறது. நெல்லரிசியை யந்திரங்களில் தீட்டுவதனால் தவிடு ஒரு சிறிதும் இன்றி நீங்கி விடுகின்றது. அதனால், அவ்வரிசியில் வைட்டமின் பெரும்பாலும் இருப்பதே இல்லை. ஆதலின், யந்திரங்களில் தீட்டிய அரிசி-

யினுல் உடம்பிற்கு உரம் உண்டாகாது. உலக்கையால் குற்றி எடுக்கும் அரிசியே நல்லது. அதனையும் தவிடு முழுதும் போய்விடும்படி தீட்டுதல் கூடாது. அவ்வாறு தீட்டினுல், அதிலிருக்கும் வைட்டமின் நீங்கி விடும். 'வரையற்றுத் தீட்டினுல் கிளையற்றுப் போகும்' என்னும் பழமொழியினுலும் தவிடு முழுதும் போகுமாறு தீட்டுதல் கூடாது என்பது அறிதல் கூடும். இக்காலத்தில், 'மில் அரிசி' எங்கும் பரவியுளது. அதனை நீக்கி, முன்போலக் 'கைக்குற்றலரிசி'யையே உணவிற்குக் கொள்ள வேண்டும். அதனுல், நாம் உரமும் நலமும் உடையவராயிருப்போம்; ஏழைப் பெண்டிரும் நெல்லைக் குற்றிக் காலங் கழிப்பர். கேழ்வரகினை அப்படியே அரைத்து உண்வாகக் கொள்ளுவதனுல் அதிலுள்ள சத்து நீங்குவதில்லை. அதனுல், நெல்லரிசியினும் கேழ்வரகே சுகவாழ்விற்கு ஏற்றது.

**ஸி** (C). இது வன்மையையும், குருதித் தூய்மையையும் உண்டுபண்ணும். தக்காளி, அன்னுசி, ஆரஞ்சு முதலிய பழங்களில் இஃது அதிகம் உளது; பாலிலும் கறிகாய்களிலும் சிறிதளவு உளது. இது, சூடு தாக்கினுல் எளிதில் கெட்டுவிடும். அதனுல், பாலைக் காய்ச்சினுலும், கறிகாய்களை வெயிலில் உலர்த்தி வற்றல் போட்டாலும் இந்தச் சத்து நீங்கிவிடும்.

**டி** (D). இது எலும்பின் வளர்ச்சிக்கு வேண்டுவது. உணவில் உள்ள உலோகப்பொருள் உடலிற் சேர்ந்து பயன்படச் செய்வது இதுவே. இது மீன்-

நெய்யிலும் கோழிமுட்டையிலும் மிகுதியாய் உளது. இதுவேண்டிய அளவு உடம்பில் இல்லாது போனால், எலும்பிற்கு வளைவு ஏற்படும்; சிலருக்குக் கூன் உண்டாவதற்கும், குழந்தைகளுக்குக் கால்கள் வளைந்து போவதற்கும் காரணம் இந்த வைட்டமின் இல்லாமையே.

இ, யப் (EF). இவை உடலின் நலத்திற்கு இன்றியமையாமல் வேண்டுவன அல்ல. ஆயினும், இவற்றால் சில நன்மைகள் உண்டாகின்றன.

உடல்வளர்ச்சிக்கும் நலத்திற்கும் வேண்டிய வைட்டமின் நமக்கு வேண்டும். ஆதலின், அவை அடங்கிய உணவுப்பொருள்களை மிகுதியாக உட்கொள்ள வேண்டும். அவற்றை வேண்டிய அளவு உட்கொள்ளாவிட்டால், உடல் வலிமை குறையும். அப்பொழுது நோயை உண்டுபண்ணும் அணுக்கள் பல்கித் தீங்கு விளைக்கும். ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு வைட்டமின் இல்லாமையே காரணம். ஆதலின், ஒரு நோயைத் தடுக்க வேண்டுமாயின், அதற்கு வேண்டிய வைட்டமின் உள்ள உணவுப்பொருளை உட்கொள்ள வேண்டும். கோதுமை, கேழ்வரகு, கம்பு முதலிய ஒற்றைப் பருப்பு வகைகளையும், பால் வெண்ணெய் தயிர் நெய் இவற்றையும், கோழிமுட்டை புதிய இறைச்சி பழங்கள் கீரைகள் இவற்றையும் வேண்டுமளவு உண்பார்களாயின், உடல் வலிமையாயும் பெரும்பாலும் நோயில்லாததாயும் இருக்கும்.

உடம்பில் எந்தச் சத்துக் குறைந்திருக்கின்றதோ அந்தச் சத்துக்கள் உள்ள பொருள்களைச் சேர்த்த மருந்தைத் தின்ருல் போதும் என்று சில காலத்திற்கு முன்வரை சிலர் எண்ணியிருந்தார்கள். அந்த மருந்துகளால் முழுப்பயன் உண்டாதல் இல்லை என்றும், அந்தஅந்த வைட்டமின் உள்ள உணவுப் பொருளையே உட்கொள்ள வேண்டும் என்றும் இப்போது கண்டறிந்திருக்கின்றனர். இதனுல், இயற்கையான உணவே நல்லது என்பது நன்கு விளங்கும்.

சிலர் உணவினைச் சமைக்காமல் பச்சையாகவே உட்கொள்கின்றனர். பழம், கீரை, தேங்காய், சில கறிகாய்கள் இவற்றைப் பச்சையாகத் தின்னலாம். வேக வைத்தாலும் வைட்டமின் கெட்டுப் போகாத பொருள்களை அளவாக வேகவைத்து உண்ணலாம்; சூட்டினுல் வைட்டமின் கெட்டுப் போகக் கூடிய உணவினைப் பச்சையாக உட்கொள்ளுதல் நல்லது. 'கடவுள் பொருள்களைப் படைத்தார்; பிசாசு சமையலை உண்டுபண்ணிற்று' என்னும் பொருளில், ஆங்கிலத்தில் ஒரு பழமொழி வழங்குகின்றது. இக்காலத்தில், இயற்கையுணவினையே, அஃதாவது சமைக்கப்படாத உணவினையே உட்கொள்ள வேண்டும் என்னுங் கொள்கை ஆங்காங்குச் சிறிது பரவி வருகின்றது. நமது நாட்டிலும் அவ்வாறு உண்போர் ஒரு சிலர் இருக்கின்றனர்.

**வினுக்கள்**

1. வைட்டமின் எந்தப் பொருள்களில் இருக்கிறது?
2. மீன்நெய்யில் வைட்டமின் இருப்பது எதனுல்?

3. ‘மில் அரிசி’யின் தீமை என்ன?

4. எலும்பின் வளர்ச்சிக்கு வேண்டும் வைட்டமின் எது?

### இலக்கணம்

உணவுப் பொருளை அளவாக வேகவைப்பது நல்லது. இந்தச் சொற்றொடரின் முடிவில் ஒரு புள்ளி இருக்கிறது அல்லவா? அந்தப் புள்ளி ஏன் இடப்பட்டிருக்கிறது? சொற்றொடர் முடிந்து விட்டது என்பதைக் குறிக்க இடப்பட்டுளது. அந்தப் புள்ளிக்கு **முற்றுப் புள்ளி** என்று பெயர்: வாக்கியம் முடிந்தவிடத்தில் முற்றுப்புள்ளி யிடல் வேண்டும்.

தக்காளி, அன்னசி, ஆரஞ்சு முதலிய பழங்களில் ‘இ’ (வைட்டமின்) உயிர்ச் சத்து உளது.

இச் சொற்றொடரில் தக்காளி, அன்னசி இச் சொற்களுக்குப் பக்கத்தில் இடப்பட்டுள்ள புள்ளிக்குக் **காற்புள்ளி** என்று பெயர்.

இவ்வாறு பல சொற்களின் வரிசையில் ஒவ்வொரு சொல்லுக்கும் அருகே காற்புள்ளி இடல் வேண்டும். ஆனால் கடைசிச் சொல்லை அடுத்து இடல் வேண்டா.

---

## 14 அரசனும் சிறுவனும்

முன்னொருகாலத்தில், அரசர் ஒருவர் வழக்கம்போல் வேட்டையாடுதற்குத் தம் படைவீரர் சிலரோடு புறப்பட்டுச் சென்றார். அவர் காட்டில் பற்பல விலங்குகளை வேட்டையாடிக் கொன்றார்; பின்னும், வேட்டையிலே நாட்டங்கொண்டு, சிலவற்றைப் பின்தொடர்ந்து விரைந்து நெடுந்தூரம் சென்றார்.

அப்பொழுது, அவருடன் சென்ற வீரர் தளர்வுற்றுப் பின்தங்கிவிட்டனர். அரசர் காட்டில் தமியராய் ஓடி அலைந்து திரிந்து களைப்புற்றார். அவருக்குப் பசி மிகுந்தது. அதனால் அவர், தம் ஊருக்குத் திரும்பிப்போக எண்ணினார். ஆனால் அவருக்கு வழி தெரியவில்லை.

பின்னர், அருகில் யாதேனும் ஊர் இருக்குமோ என்று அறிதற்பொருட்டு அரசர் அக்காட்டில் செல்லுகையில், அங்கே ஆட்டு மந்தை ஒன்று மேய்ந்துகொண்டிருக்கக் கண்டார். கண்டதும்




வறியவன் பொற்குவியல் கண்டதுபோல உளம் மகிழ்ந்து அங்கே சென்றார். அவ்விடத்தில், சிறுவனொருவன் அவ்வாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அரசர் அச் சிறுவனை அணுகி, "அப்பா,

இங்கே அருகில் ஏதேனும் ஊர் இருக்கிறதா?'' என்று வினவினர். சிறுவன் அவரை வணங்கி, ''ஐயா, அருகில் சிறிய ஊர் ஒன்று இருக்கின்றது. ஆனல் அதற்குச் செல்லும் வழி செவ்விதாயில்லே. புதியவர்கள் அவ்வழியை அறிந்து செல்லுதல் எளிதன்று'' என்று பணிவுடன் கூறினன்.

சிறுவன் கூறியதைக் கேட்ட மன்னவர் அவனே நோக்கி, ''ஆயின், சிறிது தூரம் என்னேடு வந்து வழி காட்டு'' என்று வேண்டினர். பையன் ''பெரியவரே, நான் இந்த ஆடுகளே மேய்த்துக்கொண்டிருக்கிறேன்; இப்போது நான் உம்மோடு வருதல் இயலாது. என் தலைவர் எனக்கு இட்ட பணியை யான் தவறின்றிச் செய்யவேண்டுமன்றே?'' என்று உரைத்தான். வேந்தர் அவனே நோக்கி, ''சிறிது தொலேவு என்னேடு வா. அதற்காக உனக்குப் பெரிது பொருள் தருவேன்'' என்ருர். சிறுவன் ''ஐயா, இந்த ஆடுகளே மேய்த்தற்காக என் தலைவர் எனக்கு ஊதியம் தருகிருர். நான் உம்மோடு வந்துவிட்டால் அப்பொழுது ஆடுகளுக்கு இடையூறு நேரலாம். அவ்வாறு ஏதேனும் நேர்ந்தால், என் தலைவருக்கு யான் என்ன சொல்லுவேன்?'' என்று உரைத்தான். அரசர் ''அன்பனே, அவ்வாருயின், யான் இம் மந்தையைக் காத்துக் கொண்டு இங்கேயே தங்கியிருக்கிறேன். நீ விரைந்து சென்று சிறிதளவு நன்னீர் கொண்டு, எனக்கு வழிகாட்டுவதற்குத் துணைவன் ஒருவனேயும் கூட்டி வா; இப்பொழுதே செல்'' என்று ஏவினர்.

அதனைக் கேட்ட சிறுவன், "பெரியவரே, யான் உம்மை நம்பி ஆடுகளை விட்டுவிட்டுச் செல்ல முடி-யாது; எவ்வாறாயினும் நீரே வழி அறிந்துகொண்டு செல்லுதல் வேண்டும்" என்று சினந்து கூறினான். அச்சொற்கள் செவியுறலும், வேந்தர் வெகுண்டு, "அடே பயலே, என்னைக் கள்வன் என்று கருதி-னாய் போலும்! நன்று நன்று!" என்று அதட்டிக் கூறினார். சிறுவன் 'பெரியவரே, சினம் கொள்ளாதீர். யான் உம்மைத் திருடன் என்று செப்பவில்லை; என் ஆடுகள் உமது குரலை அறியமாட்டா; உமது குரலைக் கேட்டால், அவை வெருண்டு ஓடுமேயன்றி அருகில் வாரா. அன்றியும், என் தலைவர் இட்ட பணியை மேற்கொண்டுள்ள என்னிடத்தில் இவ்வாறு கூறு-கின்ற நீர், வேறு எவரேனும் இங்கு வந்து உம்மைத் துணையாக வேண்டினால், அவரோடு செல்லாமல் இங்கே காத்திருப்பீரா? இத்தகைய உம்மை நான் எங்ஙனம் நம்புவேன்?" என்று துணிவாகக் கூறி-னான்.

சிறுவன் கூறிய நல்லுரையைச் செவியேற்ற செம்மல், அவனது நற்குணத்தையும் நம்பிக்கையை-யும், அவன் தன் தலைவன்பால் வைத்துள்ள அன்-பினையும் அறிந்து வியப்புக்கொண்டு, அவன் காட்-டிய நெறியே செல்வாராயினர். அப்பொழுது இளை-ஞன், "ஐய, நீர் பசியால் களைத்திருப்பவர்போலக் காண்கின்றீர்! இவற்றை உண்டு இளைப்பாறிவிட்டுச் செல்லும்" என்று சில பண்டங்களைக் கொடுத்து வணங்கினான். சிறுவனது அன்பிற்காக அவற்றை அவர் ஏற்றுக்கொண்டார்.

அத்தருணத்தில், மன்னவர் சென்ற வழியை நோக்கி நடந்து வந்த படைவீரர் அவ்விடத்தை அணுகினர்; அங்கே அரசரைக் கண்டு உவப்புற்று அவரைக் கைதொழுது இறைஞ்சினர். படைவீரர் இறைஞ்சிப் பணிமொழி கூறி நிற்றலைக் கண்ட சிறுவன், 'இவர் நம் மன்னவர்போலும்!' என்று உளங்கொண்டு, நடுநடுங்கிக் கைகுவித்து, கண்ணீர் உகுத்து, அரசரடிகளில் வீழ்ந்து தொழுதான். அரசர் அன்புரை கூறி அவனைத் தேற்றி, சிறிது பொருள் நல்கித் தம் படைகளுடன் சென்றார்.

பின்னர், மன்னவர் அச்சிறுவனைத் தம்மிடம் வருவித்து அவனுக்கு வேண்டுவன கொடுத்துக் கல்வி பயில்வித்து, உயர்பதவி அளித்து வாழ்வித்தார். இளைஞனும் முன்போலவே தலைவர்பால் அன்பும் உண்மையும் உடையவனாய்த் தன் தொழிலைத் தாழ்வின்றி நடத்தி மாண்புற்றான்.

### வினாக்கள்

1. அரசர் காட்டில் பட்ட துன்பம் யாது?

2, 'வறியவன் பொற்குவியல் கண்டதுபோல்'—இடம் சுட்டி விளக்குக.

3. சிறுவன் அரசரோடு சென்று வழிகாட்டவும் அவரை நம்பி ஆடுகளை விட்டுவிட்டுச் செல்லவும் மறுத்தது ஏன்?

4. சிறுவனுடைய நற்குண நற்செயல் யாவை?

5. தன்னோடு பேசிக்கொண்டிருந்தவர் மன்னர் என்பதைச் சிறுவன் எவ்வாறு உணர்ந்தான்?

6: இறுதியில் சிறுவன் பெற்ற நன்மைகளைக் கூறுக.

### இலக்கணம்

"ஐயா, அருகில் சிறிய ஊர் ஒன்று இருக்கின்றது" என்று கூறினான்.

இங்கு ஐயா என்பது ஒருவரை விளிக்க வந்தது. ஆகலின், அங்குக் காற்புள்ளி இடப்பட்டிருக்கிறது.

"ஆயின், சிறிது தூரம் என்னோடு வந்து வழிகாட்டு."
"ஆனால், அதற்குச் செல்லும் வழி செவ்விதாய் இல்லை."

இச்சொற்றொடர்களில் ஆயின், ஆனால் என்பவற்றை அடுத்துக் காற்புள்ளி இடப்பட்டுளது.

மேல் காட்டிய உதாரணங்களால் ஒருவனை விளிக்குமிடத்திலும், ஆயின், ஆனால் என்னுஞ் சொற்களை அடுத்தும் காற்புள்ளி இடவேண்டும் என்று அறியலாகும்.

### பயிற்சி

அரசர் ஒருவர் வேட்டையாடுவதற்குக் காட்டுக்குச் சென்றார். அங்கே பற்பல விலங்குகளை வேட்டையாடிக் கொன்றார். பின்னும் சிலவற்றைப் பின் தொடர்ந்து விரைந்து சென்றார். ஓடி அலைந்து திரிந்து களைப்புற்றார். அவருக்குப் பசி மிகுந்ததனால், அவர் தம் ஊருக்குத் திரும்பிப்போக எண்ணினார்.

இச் சொற்றொடரில் உரிய இடங்களில் அரைப்புள்ளி இடுக.

# 15 நான் கண்ட காட்சி

அன்பார்ந்த நண்ப, நலன். உனது நலனே அறிய விரும்புகிறேன்.

சென்ற வாரத்தில் நான் கண்ட வியப்பான காட்சியை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதை அறிந்தால் நீயும் என்னைப்போல் வியப்பும் உவப்பும் அடைவாய்.

சென்ற வாரத்தில் எங்கள் பள்ளித் தலைமையாசிரியரும் எங்கள் வகுப்புமாணுக்கரும் ஆசிரியர்களும் செங்கற்பட்டு மாவட்டத்தில், வாலாஜாபாத்தில் உள்ள பள்ளியைக் காண விரும்பிச் சென்ருேம். முன்னரே தெரிவித்திருந்ததனுல் அப் பள்ளித்தலைவரும் ஆசிரியர்களும் எங்கள் வரவை எதிர்நோக்கியிருந்தனர்; எங்களைக் கண்டதும் முகம் மலர்ந்து வரவேற்றனர். நாங்கள் எங்கள் பொருள்களை விருந்தினர்மாளிகையில் வைத்துவிட்டு, சிற்றுண்டி அருந்தினேம். பின்பு அக் கல்விநிலையத்தைப் பார்க்கலானேம். பள்ளித் தலைவர் எங்களை அழைத்துச் சென்று காண்பித்தார்.

அந்தப் பள்ளியில் எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணுக்கர்கள் வேறு வேறு மாவட்டங்களிலிருந்து வந்து படிக்கிருர்கள். ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர் அங்கேயே உண்டு உறைந்து கற்கிருர்கள். அவர்கள் எல்லோரும் உடன்பிறந்தவர்களைப் போன்று வேறுபாடு இன்றி அளவளாவுகின்றனர். ஆசிரியர் சிலரும் அங்கேயே உண்டு உறைகின்றனர். ஆதலின், அது சிறந்த குருகுலமாய் விளங்குகிறது.

அப் பாடசாலைக்குரிய கட்டடங்கள் பலப்பல உள. அவற்றுட் பெரும்பாலன பாலாற்றின் வட-

கரையில் அமைந்துள்ளன. மாணுக்கர் ஒருங்கே யிருந்து உண்பதற்கு அகலமான பெரிய கட்டடம் உளது. படித்தற்கும் உறங்குதற்கும் சில கட்டடங்கள் உள. இவையன்றி, பலவகைக் கைத்தொழில்கட்கு உரிய கட்டடங்களும் அச்சகமும் இருக்கின்றன. இக் கட்டடங்களின் முன்னல் காஞ்சீபுரத்துக்குப் போகுஞ் சாலை இருக்கிறது. சாலையை யடுத்து வடக்கில் வகுப்புஅறைகள் முதலியன புதியனவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அதை அடுத்து மாணுக்கர் பயிரிடுங் கறிகாய்த் தோட்டம் உளது. இவ்வாறு சாலையின் இருபுறங்களிலும் அப் பள்ளிக்கட்டடங்கள் அமைந்துள்ளன. இவை காண்டற்கு உரிய காட்சியே.





நாங்கள், மாணுக்கர்கள் செய்யுங் கைத்தொழில்களைப் பார்க்கச் சென்றேம். ஒரு பக்கத்தில் தச்சுவேலை நடைபெற்றது. அவர்கள் செய்த பொருள்களையெல்லாம் பார்த்தோம். அங்குச் சிலர் பொத்தான்களை விரைவாகச் செய்துகொண்டிருந்தனர்.

பிறிதோரிடத்தில் நூல்நூற்றல், நூலைச்சுற்று-தல், நெசவு நெய்தல், இவையேயன்றி, தையல் வேலையும் நடைபெற்றது. உடுப்பு முதலியவற்றைத் தையல் யந்-திரத்தில் தைத்தலையும், கையால் தைக்க வேண்டியவற்றைக் கையால் தைத்தலையும் பார்த்தோம். தையல் வேலை



முடிந்த உடுப்புக்களை அருகில் உள்ள சுவரில் ஆணி-யில் மாட்டி வைத்-திருக்கிறார்கள்.



பின்னர் மாணாக்கர் செய்யும் பலவகை உடற் பயிற்சியைப் பார்த்தோம்; பல வகை ஆசனங்கள் செய்ததைக் கவனித்தோம்.

பயிற்சி யெல்லா-வற்றுள்ளும் 'கோபுரங் கட்டுதல்' என்-னும் பயிற்சி எங்கட்கு வியப்பை உண்டு பண்ணிற்று.

படிப்பதிலும் நல்ல ஏற்பாடு செய்யப்பட்டுளது. காலையில் பள்ளிநேரத்துக்கு முன்னும், இரவில் உணவுநேரத்துக்கு முன்னும் மாணுக்கர்கள் ஒவ்வோர் அறையில் அமர்ந்து படிக்கின்றனர். ஆசிரியரொருவர் அவ்வறையில் இருப்பவர்களைக் கவனிக்கிருர்; அவர்கள்ஐயங்களைக் கேட்டு, விளக்கிக் கூறுகின்ருர். இவ்வாறு மாணுக்கர்கள் எல்லாரையும் ஆசிரியர்கள் கவனித்து வருகின்றனர்.

அந்தப் பள்ளி மாணுக்கர் தங்களுக்குள் 'அரசியல் குழு' ஒன்றை அமைத்திருக்கின்றனர்; நமது மாநில அரசியல் மாதிரி நடைபெறச் செய்திருக்கின்றனர். அரசியல் குழுவில் அமைச்சர் பதின்மர் உளர். ஒவ்வொருவர் ஒவ்வோர் துறையை மேற்கொண்டிருக்கின்றனர்; சுகாதார இலாகா, மருத்துவ இலாகா, மராமத்து இலாகா, விளம்பர இலாகா, உணவுப்பொருள் இலாகா, பொருள் இலாகா இவ்வாறு பிரிவு செய்திருக்கின்றனர். இவர்கள்அவைக்குத் தலைவரும் துணைத்தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆட்சிமுறையை மாணுக்கர் நன்கு அறிந்துகொள்ளுவதற்காக இது அமைக்கப்பட்டுளது. பள்ளியின் நிகழ்ச்சிமுறையைப் பார்த்தற்குப் பல உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து மாணுக்கர்களும் ஆசிரியர்களும் வருகிருர்கள். அறிஞர்கள், பெருஞ்செல்வர்கள் முதலியோரும் வந்து நடைமுறைகளைக் கண்டு மகிழ்கின்றனர்.

குருகுலத்தில் தந்தையார் ஒருவரும் தமையனுர் ஒருவரும் உளர். தந்தையாரைத் தமிழ்நாட்டில்

அறியாதார் இலர். அவர் முயற்சியில் பகீரதனையும் வென்றவர். அவர் தாம் திரு. மாசிலாமணி முதலியார். அவர் அடிக்கடி வெளியூர்கட்குச் சென்றுவிடுவார். அங்கேயே யிருந்து கவனித்துவரும் தமையனார் திரு. தணிகையரசு என்பவர். குருகுலத்து மாணாக்கரெல்லாரும் இவர்களை அப்பா என்றும், அண்ணா என்றுமே அழைக்கின்றனர். குருகுலத்துக்கு வருபவர்கள் எல்லாரும் இவர்கள் முயற்சியைப் பாராட்டி மகிழ்ந்து "நீடு வாழ்க" என்று வாழ்த்துகின்றனர்.

நண்பன்,
கண்ணன்

## வினாக்கள்

1. சிறந்த குருகுலமாய் விளங்குவது எது? எதனால்?

2. வாலாஜாபாத் பாடசாலையில் நடைபெறும் கைத்தொழில்கள் எவை?

3. வாலாஜாபாத் பாடசாலைமாணாக்கர் செய்யும் பயிற்சிகளில் வியக்கத்தக்கது எது? எதனால்?

4. பாடசாலையில் அரசியல் குழு அமைத்திருப்பதின் நோக்கம் என்ன?

5. வாலாஜாபாத் பாடசாலை நடைபெறும் முறையைப் பற்றி ஒருபக்கம் எழுதுக.

## பயிற்சி

1. எல்லாரும் உடன்பிறந்தவர்களைப் போன்று....
2. சாலையின் இருபுறங்களிலும் ....
3. பல பள்ளிகளிலிருந்து...

இச் சொற்றொடர்களை முடிக்க.

முன்னால், ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர், வடகரை, விரைவாக, மகிழ்கின்றனர், வெளியூர்.

இவற்றிற்கு எதிரிடை மொழிகளை எழுதுக.

## 16. இளைஞர் செஞ்சிலுவைக்கழகம்

உலகத்தில் இயல்பாகவே மனிதருள் சிலர் உடல்வலிமை உள்ளவராயும், சிலர் நுண்ணறிவு உள்ளவராயும் இருக்கின்றனர். நுண்ணறிவு மிக்கவர் தம் அறிவின் திறத்தாலும் முயற்சியினாலும் பெரும்பொருள் படைத்துப் பெருஞ் செல்வராய் விளங்குகின்றனர்.

உடல்வலிமை மிக்கவர் பிறருக்குத் தம் உடம்பினால் ஆகும் உதவியைச் செய்யவேண்டும்; பெருஞ் செல்வர் தம் பொருளால் உதவி புரியவேண்டும்; அறிவுமிக்கவர் பிறரையும் அறிவுள்ளவராகச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் தம்மால் இயலும் உதவியைப் பிறருக்குச் செய்யவேண்டும்.

உதவி செய்யும் எண்ணம் உள்ளவர் பலர் ஒரு கழகமாகச் சேர்ந்து, அக் கழகத்தின் மூலம் பலருக்கு உதவி செய்கின்றனர். தனிமனிதர் செய்வதனிலும் பலர் கூடிச் செய்வது நல்லது. சாரணர்இயக்கம், செஞ்சிலுவைக்கழகம் இவை பிறருக்கு நன்மை செய்தற்காகவே தோன்றியுள்ளன.

செஞ்சிலுவைக் கழகத்தில் இளைஞரும் சேரலாம். இதில் இளைஞர் பலர் சேர்ந்து நடத்துவது 'இளைஞர் செஞ்சிலுவைக் கழகம்' என்று சொல்லப்படும். இக் கழகத்தில் பள்ளிமாணுக்கர் சேரலாம். சில உயர்நிலைப் பள்ளிகளில் இளைஞர் செஞ்சிலுவைக் கழகம் அமைக்கப்பட்டுளது.

செஞ்சிலுவைக் கழகம் மக்கட்குப் பலவழிகளில் நன்மை செய்கின்றது. முக்கியமாக—சுகாதார

விதிகளை மக்கட்கு அறிவித்து அவர்களை நோயின்றி வாழச் செய்கின்றது. பல நோய்களை வாராமலே தடுக்கலாம்; வரினும் பரவவொட்டாமல் செய்யலாம். ஈ, கொதுகு, எலி இவற்றின்மூலம் பல நோய்கள் பரவுகின்றன. ஈ, கொதுகு முதலியவற்றை அழித்துவந்தால் அந்நோய்கள் பரவமாட்டா. மலேரியாக் காய்ச்சல் ஒருவகைக் கொதுகுகளால் பரவுகின்றது. பிளேக் என்னும் கொடிய நோய் எலிகளின்மூலம் பரவுகின்றது. ஆதலின் இவற்றை அழிப்பது இன்றி-



யமையாததாகும். வைசூரி வருங் காலத்தில் எல்லாரையும் அம்மை குத்திக்கொள்ளும்படி செய்யவேண்டும். வாந்தி பேதி, பிளேக் இவை வரின், இவற்றைத் தடுக்கும் மருந்துகளை ஊசியின்மூலம்

உடம்பில் செலுத்திக்கொள்ளவேண்டும். இத்தடுப்புமுறைகளை முதலில் இளைஞர்கழகத்தார் மேற்கொண்டு, பிறருக்கு எடுத்துரைக்கவேண்டும். சிற்றூர்மக்கள், இந் நோய்கள் சிறு தெய்வங்களால் வருகின்றன என்று எண்ணுகின்றனர். உண்மைக் காரணத்தைச் சொற்பொழிவு, நாடகம் இவற்றின் மூலம் அவர்கள் உணரும்படி செய்யவேண்டும்.

நமது நாட்டில் பெரும்பாலோர் கல்வி கற்காதவர். அவர்கட்குக் கல்வியறிவூட்டுதல் முக்கியமானது. கற்றவர்கள் ஒவ்வொருவரும் இப்பணியை மேற்கொள்வது கடமையாகும். இக்கழகத்தார் முதலில் இதனைச் செய்வது நன்று. கல்வுயறிவு உண்டானபின் சுகாதார வழிகளைக் கூறும் நூல்களைக் கற்பிக்கலாம்; படிக்கச்செய்யலாம்.

நாம் உண்ணும் உணவில் உடலை வளர்த்தற்கு வேண்டுஞ் சத்துக்கள் எல்லாம் அடங்கியிருத்தல் வேண்டும். தசையை உண்டாக்குஞ் சத்து, கொழுப்புச் சத்து, சர்க்கரைச் சத்து, வைட்டமின் என்னும் உயிர்ச்சத்து, உப்புக்கள் இவை வேண்டுமளவு உடம்பில் சேரவேண்டும். உணவுப்பொருள்கள் ஒவ்வொன்றிலும் இவற்றின் அளவு வேறுபடுகின்றது. இச் சத்துக்களை அளவுபடுத்திய உணவை உண்ணுதல் வேண்டும். உணவுப்பொருள்களில் உள்ள சத்துக்களின் அளவுகளைச் செஞ்சிலுவைக் கழகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். இளைஞர் கழகத்தார் அப் புத்தகங்களைப் படித்து அறிந்துகொண்டு மக்கட்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

இளைஞர் செஞ்சிலுவைக் கழகத்தார் ஆபத்தில் செய்யும் முதலுதவிகளைப் பயின்றிருத்தல்வேண்டும். சிற்றூரில் மக்கட்கு ஆபத்து நேரும்போது முதலுதவியைச் செய்யவேண்டும். அம்முறைகளைச் சிற்றூர் மக்களுட் சிலருக்குக் கற்பித்தல் நன்று. பெருவெள்ளம், தீ, வறுமை முதலியவற்றால் மக்கட்குத் துன்பம் நேரும்போது இளைஞர்கள் பலவழிகளில் உதவி செய்யவேண்டும். இளைஞர்கள் சாதி, மத வேறுபாட்டைக் கருதலாகாது; எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்தலிலேயே நோக்கம் உள்ளவர்களா யிருத்தல் வேண்டும்.

தெருக்களில் சிலர் பழத்தோல்களைப் போட்டுவிடுகிறார்கள். அதனால் வழியிற் செல்பவர் வழுக்கி விழுந்து துன்பத்துக்கு ஆளாகின்றனர். சிலர் கண்ணாடித்துண்டுகளைத் தெருவில் எறிந்துவிடுகிறார்கள். அவற்றாலும் அல்லல் நேர்கின்றது. ஆதலின் இக்கழகத்துச் சிறுவர் வழியில் தாங்கள் காணும் இப்பொருள்களையும் ஆணிகள் முதலியவற்றையும் எடுத்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

நமது நாட்டில் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வசிக்கின்றனர். நாம் அவர்களோடு பழகினால்தான் அவர்கள் இயல்பினை அறிதல் கூடும்; அவர்களும் நம்மைப்பற்றி அறிந்துகொள்ள இயலும். அத்தகைய பழக்கம் உண்டானால் பின்னர் வெளிநாட்டினரோடும் நாம் எளிதில் பழக முடியும். ஒரு நாட்டினர் பிறநாட்டினரைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டு அவர்களோடு ஒற்றுமையாக வாழ்ந்தால்

உலகநட்பு உண்டாகும். இக் கருத்தினை இளைஞர்-உள்ளத்தில் நிலைநிறுத்துதல் இளைஞர் செஞ்சிலுவைக் கழகத்தாரின் கடமையாகும்.

இளைஞர் செஞ்சிலுவைக் கழகத்தார் செல்வ-ரிடத்தில் பணம், பிறபொருள்கள் இவற்றைப் பெற்று ஏழைகட்கு உடை உணவு அளிக்கலாம்; ஏழைக் குழந்தைகட்குப் பால் உதவலாம்; சுகாதார வாரக்-கொண்டாட்டம், சுகாதார நாடகம் இவற்றால் மக்கள் அறிவடையச் செய்யலாம்.

நாட்டில் நலன்வழியைப் பரவச் செய்தல், பிற-ருக்கு உதவி செய்தல், உலகநட்பை உண்டாக்கி வளர்த்தல் ஆகிய இம்மூன்றையும் தம் குறிக்கோளா-கக்கொண்டு இளைஞர் செஞ்சிலுவைக் கழகத்தார் பணியாற்றி வருகின்றனர். இக்கழகத்தில் நீங்களுஞ் சேர்ந்து தொண்டு செய்வீர்களாக.

### வினாக்கள்

1. செஞ்சிலுவைக் கழகத்தாரின் குறிக்கோள் யாவை?

2. அவர்கள் செய்யும் முக்கிய நன்மை யாது?

3. எத்தகைய உணவை உண்ணவேண்டும்? இதைப்-பற்றி இளைஞர் செஞ்சிலுவைக் கழகத்தார் என்ன செய்ய-வேண்டும்?

4. உலகநட்பை உண்டாக்குதற்கு என்ன செய்ய-வேண்டும்?

### இலக்கணம்

நாம் பல நோய்களை வாராமலே தடுக்கலாம்; வரினும் பரவவொட்டாமல் செய்யலாம்.

இங்கு 'நாம்' என்னும் ஓர் எழுவாய்க்குத் 'தடுக்கலாம்' 'செய்யலாம்' என்று இரண்டு பயனிலைகள் தொடர்ந்து வந்துள்ளன. இங்கு, முதற்பயனிலையை அடுத்து **அரைப்புள்ளி** இடப்பட்டுளது.

அருகில் ஏதேனும் ஊர் இருக்கிறதா? என்று கேட்டார். இந்தச் சொற்றொடரில் 'ஊர் இருக்கிறதா' என்பது வினவாதலின் அதைத் தெரிவித்தற்காக (?) இந்த அடையாளம் இடப்பட்டுளது. இதற்கு **வினாக்குறி** என்று பெயர்.

"என்னைக் கள்வனென்று கருதினாய் போலும்! நன்று! நன்று!"—இதில் நன்று! நன்று! என்பது சொல்பவனுடைய உள்ளத்திலிருக்கும் உணர்ச்சியைக் காட்டுதலின் (!) இந்த அடையாளம் இடப்பட்டுளது. இதற்கு **உணர்ச்சிக்குறி** என்று பெயர்.

---

# 17. பலவகைக் கடிதங்கள்

கீழ்வகுப்பில் கடிதம் எழுதும் முறையை அறிந்திருக்கிறீர்கள். இங்கே சில கடிதங்களை எழுதும் முறையை அறிவோம்.

**1**

உன் தமக்கையின் திருமணத்துக்கு வருமாறு நண்பனுக்குக் கடிதம் எழுது.

4, வடக்குத் தேர்த் தெரு,
திருநெல்வேலி.
8—6—1952.

அன்பார்ந்த கோபாலனுக்கு நலன் உண்டாகுக.

இம்மாதம் 15-ஆம் நாள் புதன்கிழமை என் தமக்கை வள்ளியம்மைக்குத் திருமணம் நடைபெறப்

போவதனுல், நீ தவருமல் வரவேண்டும். என் பெற்ருேரும் உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

உன் அன்பார்ந்த நண்பன்,
முகுந்தன்.

திரு. கோபாலன்,
25, பச்சையப்பமுதலித் தெரு.
கும்பகோணம்.

---

## 2

உன் பள்ளியின் கழக ஆண்டுவிழாவில் தலைமை தாங்குமாறு வேண்டிப் பெரியார் ஒருவருக்கு அழைப்பு விடுக்க.

நகராட்சிக் கழகப் பள்ளி,
நுங்கம்பாக்கம், சென்னை 6.
5—3—1951.

அன்பார்ந்த ஐய,

வணக்கம். எங்கள் பள்ளித் தமிழ்க்கழக ஆண்டுவிழாவை இவ்வாண்டு மார்ச்சுத் திங்கள் பத்தாம் நாளில் கொண்டாடவேண்டும் என்று எங்கள் தலைமையாசிரியர்அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்நாட் கூட்டத்துக்குத் தாங்கள் தலைமை தாங்கவேண்டும் என்று வேண்டுகின்றேன். பள்ளிமாணக்கர், ஆசிரியர் அனைவரும் தங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். ஆகலின்,

தாங்கள் அன்பு கூர்ந்து எழுந்தருளி எங்களுக்கு அறிவுரை கூறவேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
நன்றியுள்ள
சதாசிவம்.
(கழக அமைச்சன்)

மாட்சிமிக்க தலைவர்,
நகராட்சிக் கழகம், சென்னை.

---

## 3

புத்தகக் கம்பெனிக்கு எழுதுக.

கூட்டுறவுப் பண்டக நிலையம்,
கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.
20—6—'52.

பொறுப்பாளர்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
பவழக்காரத் தெரு, சென்னை 1.

ஐயா,

கீழ்க்காணும் புத்தகங்களைக் கூடிய விரைவில் புகைவண்டி மூலம் அனுப்பி, எங்கள் கணக்கில் பற்று எழுதிக்கொள்ள வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் | சுவடி | 7 |
| 2. | நளவெண்பா | ,, | 10 |

3. சிலப்பதிகாரக் கதை சுவடி 5
4. மணிமேகலைக் கதை ,, 5

உங்களுக்குச் சேரவேண்டிய தொகையை ஆகஸ்ட் முதல்வாரத்தில் அனுப்புவேன்.

இப்படிக்கு,
நன்றியுள்ள
நாராயணன்,
செயலாளன்.

---

## 4

குறித்த நாளில் நண்பனைப் பார்க்காததைக் குறித்து மன்னிக்கவேண்டிக் கடிதம் எழுது.

18, பச்சையப்பன் தெரு,
மாயூரம்.
10—8—1952.

அன்புள்ள கணேசா,

நேற்று மாலை ஐந்து மணிக்குக் கடற்கரையில் உன்னைக் காண்பதாகக் கூறியிருந்தேன். நான் சொன்னபடி செய்யாமைக்கு என்னை மன்னிக்க-வேண்டுகின்றேன்; காரணத்தை அறிந்தால் என்-மீது சினங்கொள்ளமாட்டாய் என்று எண்ணுகின்-றேன்.

நேற்று மாலை உன்னைக் காணப் புறப்பட்ட பொழுது, என் தாயாருக்கு உடல் நலமில்லை என்-றும் நான் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்றும்

தந்தையாரிடமிருந்து தந்தி வந்தது. புகைவண்டிக்குப் போக அதிக நேரம் இல்லை. உனக்குச் சொல்லி அனுப்ப வீட்டில் ஒருவரும் இல்லை. ஆதலால், உடனே புறப்பட்டு இங்கு வந்துவிட்டேன்.

என் தாயாருக்கு உடல் சிறிது நலமாயிருக்கிறது. படுக்கைதான். முழுவதும் குணமடைய இரண்டு திங்கள் ஆகும் என்று மருத்துவர் சொல்கிறார். எல்லாம் கடவுள் செயல்.

என் வரவை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்திருப்பாய். அதற்கு என்னை மன்னிக்கவேண்டும்.

அன்பன்,
கார்த்திகேயன்.

திரு. கணேசன்,
2-ஆம் படிவம்,
இந்து உயர்நிலைப்பள்ளி,
சென்னை 5.

---

### பயிற்சி

1. உன் அண்ணனின் திருமணத்துக்கு வருமாறு அழைப்புக்கடிதம் விடுக்க மறந்ததற்கு மன்னிக்கும்படி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

2. சுதந்திர விழாவைக் கொண்டாடுவதற்குத் தம் கூடத்தை உதவும்படி ஒரு செல்வருக்குக் கடிதம் எழுதுக.

3. கடிகாரம் சரியாக ஓடவில்லை என்று நீ அதை வாங்கின கம்பெனிக்கு எழுதுக.

4. புத்தக விலைப்பட்டி ஒன்று அனுப்பும்படி ஒரு கம்பெனிக்குக் கடிதம் வரைக.

5. உங்கள் தமிழ்ப்பாடப் புத்தகம் 10 சுவடிகள் அனுப்புமாறு பழனியப்ப பிரதர்ஸுக்குக் (தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி) கடிதம் எழுதுக.

# 18. செங்கோலரசன்

குடிகளுக்கு எந்த வகையிலும் தீங்கு நேரா-வண்ணம் காவல் புரிந்து நன்மை செய்பவனே செங்கோலரசனாவான். அத்தகைய அரசனை அவன்-நாட்டவரே அன்றிப் பிற நாட்டவரும் புகழ்ந்து கொண்டாடுவர். அவ்வரசனது புகழ் என்றும் அழியாது நின்று நிலவும். குடிகளின் துன்பம் கரு-தாமல், தம் இன்பம் ஒன்றனையே நாடி அரசு புரிப-வர் கொடுங்கோலரசர் ஆவர். அவர்கள் பழியையும் பாவத்தையும் அடைவதோடு, தங்கள் நாட்டையும் இழந்து வருந்துவர். தன் நலங் கருதாமலும், குடி-களுக்கு இன்னல் நேராமலும் அரசு புரிந்த செங்-கோலரசனைப் பற்றிய கதை யொன்றினை இங்கே அறிவோம்.

முற்காலத்தில் செங்கோலரசன் ஒருவன் ஒரு-நகரில் அரசு செலுத்தி வாழ்ந்திருந்தான். அவன், வறியர் என்றும் செல்வர் என்றும் வேற்றுமை கரு-தாமல், எல்லாருக்கும் ஒரே தன்மையாக முறை-செய்து வந்தான். அவன் ஆட்சியில், வானம் பொய்யாது மழைபொழிந்தது. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்ந்தன.

அரசன் ஒருநாள், புதிதாக அரண்மனை ஒன்று அமைக்கக் கருதி, அதனைச் சிற்பநூல் வல்லோருக்-குத் தெரிவித்தான். அவர்கள் அரசன் கருத்திற்-கிணங்கப் பெரியதோர் அரண்மனையின் அமைப்-பினை ஆராய்ந்து வகுக்கலாயினர். அரண்மனை கட்டுதற்குத் தக்க இடமாகத் தேர்ந்தெடுத்த இடத்-

தில், சிறிய குடிசை ஒன்று இருந்தது. அது, அரண்மனையின் நடுவில் அமைவதாயிற்று. அந்த இடமே அரண்மனை அமைப்பதற்குத் தகுந்த இடம் என்றும், அரண்மனையை வேறுவகையாக அமைக்க இயலாது என்றும் சிற்பநூலோர் தேர்ந்தனர்; அவற்றை அரசனுக்கு அறிவித்து, அங்கிருந்த குடிசையை அப்புறப்படுத்த வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

வேந்தன் அக் குடிசை ஒரு கிழவியினுடையது என்பதை அறிந்து அவளை வருவித்து, 'அம்மா, புதிதாக யான் அரண்மனை ஒன்று அமைக்கத் தொடங்கியுள்ளேன்; உன் குடிசை அந்நிலத்தின் நடுவிடத்தில் இருப்பதாகத் தெரிகின்றது. அந்த இடமே அரண்மனை அமைத்தற்குத் தகுந்த இடம் என்று சிற்பநூலோர் கூறுகின்றனர். ஆதலின், நின் மனையை அரசாங்கத்திற்கு விடுத்து, வேண்டும் பொருளைப் பெற்றுக்கொள்' என்று வேண்டினான். முதியவள் வேந்தனை நோக்கி, 'அரசே, அந்தக் குடிசையே எனக்குக் கோயில்; அப் பழமனையே எனக்கு வளமனை. யான் அக் குடிசையிற் குடிவந்த பின்பே எனக்குச் செல்வம் சேர்ந்தது; பன்றிகள் பல்கின. ஆதலின், அந்தச் சிறு மனையை விடுத்து வேறு அரண்மனையிலும் குடியிரேன்; பொருட்குவியல் தரினும் என் இலைக்குடிலை விடேன்' என்று துணிந்து கூறினாள்.

கிழவியின் மனநிலையை அறிந்த வேந்தன், வற்புறுத்துதல் முறையன்று எனக் கருதி, அவளுக்கு

விரைவாக வந்துகொண்டிருந்தது. பச்சிளங்குழந்தையொன்று இரும்புப்பாதையில் விளையாடிக் கொண்டிருந்தது. எடிசன் தம்முயிருக்கு வரும் பெருந்தீங்கினையும் பொருட்படுத்தாமல் விரைந்து ஓடிச் சென்று, அக் குழந்தையைத் தூக்கிக் காப்பாற்றினர். அது அந்நிலையத்து அதிகாரியின் குழந்தை. அவர் தம் குழந்தை இறவாமல் காத்த எடிசன்மேல் அளவில்லாத அன்பு கொண்டார்; அதனல் எடிசன் விரும்பியவாறே, அவருக்குத் தந்தியடிக்குந் தொழிலைக் கற்பித்தார். எடிசனும் அத்தொழிலைத் திறம்படக் கற்றுக்கொண்டார்; சிறிது காலம் இரவில் விழித்திருந்து தந்தி கொடுத்து வந்தார்; பின்பு, அவ்வேலையிலிருந்து விலக்கப்பட்டார்.

அதன்பின்பு, 'சின்சினட்டி' என்னும் நகரில் உள்ள தந்திச்சாலையில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு மாதம் நூற்றைந்து டாலர் வருவாய் வந்தது. பின்னர் அவ்வேலையும் போயிற்று. அதன் பின்பு, பல இடங்களில் வேறுபட்ட பல வேலைகளில் ஈடுபட்டார். இறுதியாகப் 'பாஸ்டன்' நகரை அடைந்தார்; அங்குள்ள தந்திச்சாலை யொன்றில் தொழில் செய்து வந்தார். ஒரு கம்பிமூலம் ஒரே காலத்தில் நான்கு தந்திகளை அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார். அதனல் எடிசனை எல்லோரும் போற்றினர்கள். அப்பால், வாக்குரிமைச் சீட்டுக்களை எண்ணுவதற் குரிய கருவி யொன்றினைக் கண்டறிந்தார்.

பின்பு, எடிசன் நியூயார்க் நகரை அடைந்து அங்கு ஒரு பொன்வாணிக நிலையத்தில் உள்ள

அரசன் வேண்டுகோளையும், முதியவள் உடன்படாமையையும் அறிந்த நகரமாந்தருட் சிலர், 'ஆ! நம் மன்னவன் அறமே உருவெடுத்து வந்தாற்போன்றவன்! இவனது முறையும் நெறியும் யாரால் எடுத்துரைக்கக் கூடும்! இவன் பொறுமைதான் என்னே! இவனே செங்கோலரசன்!' என்று நெஞ்சாரப் புகழ்ந்தனர். வேறு சிலர், 'கிழவியின் குடிலை அழித்து, அவளைத் தொலைத்துவிட்டு வாழாமல், தன் கோயிலைப் பாழாக்குங் கொற்றவனே வெற்றி பெறுவான்! இவனது அறிவின்மைதான் என்னே!' என்று அரசனைப் பழித்துரைத்தனர். மற்றுஞ் சிலர், 'அறுபது வயதானால் அறிவு மயங்கும் என்பார்கள் அன்றோ? வயது முதிர்ந்த கிழவிக்கு அறிவு இல்லை. அவள் நல்லறிவு உடையவளானால், அரண்மனையில் சுகமாக வாழ்ந்திருக்கமாட்டாளோ! அல்லது, பெரும் பொருளைப் பெற்றுக்கொள்ள மறுப்பாளோ! அவளுக்கு நல்வினைப்பயன் இல்லை' என்று கிழவியின் அறிவின்மைக்கு இரங்கினர். யார் எது கூறினும், மன்னவன் கிழவிக்கு இன்னல் செய்ய எண்ணவில்லை; கிழவி தன் கருத்தை மாற்றிக்கொள்ளவும் உன்னவில்லை.

இங்ஙனமாக, ஒருநாள் மன்னவன் அக் கிழவியை நோக்கி, 'அன்னையே, யான் பலதடவை வேண்டி இரந்தும் நீ என் வேண்டுகோளை மறுத்தற்குக் காரணம் யாது? அதனை எனக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று வேண்டினான். அம் முதியவள், 'அரசே, நான் குடிசையில் இருத்தலினும் உமது கோயிலில் வாழ்தலில் குறைவுண்டோ? நான்

அதற்கு உடம்படாமைக்குக் காரணம் ஒன்று உண்டு. அஃதாவது, உமது அரசாட்சியின் அறநெறி உலகத்தில் எந்நாளும் அழியாது நிற்கவேண்டும் என்பதே; வேறில்லை' என்று வணங்கிக் கூறினாள்.

கிழவியின் கருத்தை அறிந்த மன்னவன் மனமகிழ்ந்து, 'அன்னையே, இதனால் உனது வரலாறும் என்றும் நிலைநிற்பதாகும்; நீ முன்போலவே உன் குடிலில் வாழ்ந்திரு' என்று பணித்தான். அதனை அறிந்த மாந்தர் மன்னவன்நெறிமுறையை உளங்கொண்டு அவனை வாயார வாழ்த்தினர்.

### வினாக்கள்

1. செங்கோலரசர், கொடுங்கோலரசர் இவர்களுக்கு உள்ள வேற்றுமைகள் யாவை?

2. கிழவி தன் குடிசையைக் கொடுக்க மறுத்து, முதலில் கூறியதென்ன?

3. அரண்மனையின் அழகை அக்குடிசை எவ்வாறு கெடுத்தது?

4. நகரமாந்தர் மன்னனையும் அக்கிழவியையும் பற்றி என்ன என்ன கூறினர்?

5. அரசன்வேண்டுகோளை மறுத்ததற்குக் கிழவி இறுதியில் எக்காரணம் கூறினாள்?

# 19. தாமஸ் ஆல்வா எடிசன்

கண்ணைக் கவரும் பலவித வண்ணங்களுடன் விளங்கும் மின்சார விளக்குக்கள், காற்றினும் கடுகிச்-சுழலும் மின்சார விசிறிகள், ஆடிப்பாடி இன்ப மூட்டும் திரைப்படங்கள், இசை விருந்தளிக்கும் இசைத் தட்டுக்கள் முதலியவற்றைக் கண்டும் கேட்டும் களிப்படைகின்றோம். இவற்றையெல்லாம் கண்டு பிடித்து, நம்மை இன்பமடையச் செய்தவர் யார்? அவரே தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர்.

அமெரிக்காவில் உள்ள மிலான் என்ற ஊரில் சாமுவேல் மோர்ஸ் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் நான்ஸி எலியட் என்பவர். இவர்கட்கு அருமை மகனாய்ப் பிறந்தார் நம் எடிசன். பெற்றோர்கள் தம் குழந்தையைக் கண்ணினைக் காக்கின்ற இமை போலக் காத்து வந்தனர்.

எடிசன் சிறுவயதினராய் இருக்கும் பொழுது ஒருநாள் அவரைக் காணவில்லை; தாய் தந்தையர் கண்கலங்கி அங்கும் இங்கும் தேடினர்; இறுதியில் ஓர் அறையில் எடிசனைக் கண்டனர். அவர்கள் கண்ட காட்சி என்ன? எடிசன் வாத்துமுட்டைகளை நடுவில் வைத்து வளைந்துகொண்டிருந்தார். பெற்றோர்கள், 'ஏன் இப்படிச் செய்கின்றாய்?' என்று கேட்டனர். "பெட்டை அடைகாப்பதுபோல், நானும் அடைகாத்து வருகின்றேன். இனி, முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரும்" என்று எடிசன் கூறினார். பெற்றோர் அவருடைய அறியாமையை-

யும், ஆராய்ச்சி செய்வதில் உள்ள ஆர்வத்தையும் கண்டு வியந்தனர். விளையும் பயிர் முளையிலே தெரியும் அன்றோ!

எடிசன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். உழைத்தால்தான் வயிறார உண்ணலாம் என்ற நிலை எடிசனுக்கு ஏற்பட்டது. அதனால், தொடர்வண்டி-நிலையங்களில் செய்தித்தாள் விற்கும் பணியை மேற்கொண்டார். அதில் சிறிது வருவாய் கிடைத்தது. தொடர்வண்டியிலே சென்று பிரயாணிகளிடம் செய்தித்தாள்களை விற்றுவந்தார்; தாமாகவே, அவ்-வண்டியில் ஓர் அச்சகம் அமைத்து, அச்சிட்டு விற்று வந்தார்; எஞ்சிய நேரங்களில் அவ்வறையில் இரசாயன ஆராய்ச்சியையும் நடத்தி வந்தார்.

ஒருநாள் அவ்வண்டியில் பெரிதும் ஆட்டம் ஏற்-பட்டது. அதனால், எடிசனது இரசாயன அறையில் இருந்த ஒரு கண்ணாடிக்குழாய் கீழே விழுந்து உடைந்தது. ஆதலின், சோதனைக்காக அதில் வைத்திருந்த தீநச்சுப்பொருள் உடனே வண்டியில் சிதறியது. தீப்பற்றிக்கொண்டது. அதனால், எடி-சன் வெளியேற்றப்பட்டார். அச்சகப் பொருள்களும் இரசாயனப் பொருள்களும் வீசி எறியப்பட்டன. அதிகாரிகள் எடிசனைக் கன்னத்தில் அடித்தார்கள். அதனால் அவர் காது செவிடாயிற்று.

எடிசன் சிறிது காலம் வேலையின்றி வறுமையில் வாடி வருந்தினார். ஒருநாள் 'மவுண்ட் கிளிமெண்ட்' என்னுந் தொட்டிவண்டி நிலையத்தில் நின்று-கொண்டிருந்தார். அப்பொழுது வண்டி யொன்று

விரைவாக வந்துகொண்டிருந்தது. பச்சிளங்குழந்தையொன்று இரும்புப்பாதையில் விளையாடிக் கொண்டிருந்தது. எடிசன் தம்முயிருக்கு வரும் பெருந்தீங்கினையும் பொருட்படுத்தாமல் விரைந்து ஓடிச் சென்று, அக் குழந்தையைத் தூக்கிக் காப்பாற்றினர். அது அந்நிலையத்து அதிகாரியின் குழந்தை. அவர் தம் குழந்தை இறவாமல் காத்த எடிசன்மேல் அளவில்லாத அன்பு கொண்டார்; அதனல் எடிசன் விரும்பியவாறே, அவருக்குத் தந்தியடிக்குந் தொழிலைக் கற்பித்தார். எடிசனும் அத்தொழிலைத் திறம்படக் கற்றுக்கொண்டார்; சிறிது காலம் இரவில் விழித்திருந்து தந்தி கொடுத்து வந்தார்; பின்பு, அவ்வேலையிலிருந்து விலக்கப்பட்டார்.

அதன்பின்பு, 'சின்சினட்டி' என்னும் நகரில் உள்ள தந்திச்சாலையில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு மாதம் நூற்றைந்து டாலர் வருவாய் வந்தது. பின்னர் அவ்வேலையும் போயிற்று. அதன் பின்பு, பல இடங்களில் வேறுபட்ட பல வேலைகளில் ஈடுபட்டார். இறுதியாகப் 'பாஸ்டன்' நகரை அடைந்தார்; அங்குள்ள தந்திச்சாலை யொன்றில் தொழில் செய்து வந்தார். ஒரு கம்பிமூலம் ஒரே காலத்தில் நான்கு தந்திகளை அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார். அதனல் எடிசனை எல்லோரும் போற்றினர்கள். அப்பால், வாக்குரிமைச் சீட்டுக்களை எண்ணுவதற் குரிய கருவி யொன்றினைக் கண்டறிந்தார்.

பின்பு, எடிசன் நியூயார்க் நகரை அடைந்து அங்கு ஒரு பொன்வாணிக நிலையத்தில் உள்ள

பொறிகளை மேற்பார்வை யிடும் பணியில் அமர்ந்தார்; அங்கிருந்தபோது பல புதிய கருவிகளைக் கண்டு-பிடித்தார். அவைகளையெல்லாம் நாற்பதினுயிரம் டாலர்க்கு விற்றுவிட்டார்.

எடிசன் இருபத்தாருவது வயதில் ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்தார். அத் தொழிற்-சாலையில் பணிப்பெண்ணாக இருந்த 'ஸ்டிவெல்' என்பவளை மணந்துகொண்டார். அவ்வம்மையார் மின்விளக்குக்களைக் கண்டு பிடிக்கும் அறிஞர்க்கு வாழ்க்கைவிளக்காக அமைந்திருந்தார். ஆயினும், அந்தோ, சில ஆண்டுகளுக்குள் மூன்று குழந்தை-களை விட்டுவிட்டு மறைந்துவிட்டார்! எடிசன் அக்-குழந்தைகளை நன்முறையில் வளர்த்துவந்தார்.

எடிசன் பல்வேறு துறைகளில் புதிய புதிய இயந்திரங்களைக் கண்டுபிடித்தார், நியூயார்க்கில் அதற்குப் போதிய இடவசதி இல்லை. அதனால், அவர் அங்கிருந்து இருபத்தொரு கல் தொலைவுள்ள "மெனலோ பார்க்" என்ற இடத்துக்குச் சென்று, பெரிய தொழிற்சாலையை அமைத்து, ஆராய்ச்சிகள் பல நடத்தி வந்தார்; டெலிபோனில் பல சீர்திருத்-தங்களைச் செய்து செம்மைப்படுத்தினர்; அவற்றை ஒரு கம்பெனிக்கு விற்றுப் பெரும் பொருள் ஈட்டினர். மனிதனுடைய உடல்வெப்பத்தை அளக்கக்கூடிய நுட்பமான கருவியைக் கண்டு பிடித்தார்; பின்பு, ஒலிபெருக்கியைக் கண்டறிந்தார்; 'சைக்லோ-ஸ்டைல்' பொறியையும், 'கிராம்போ'னையும், இசைத்-தட்டுக்களையும் கண்டு பிடித்தார். எடிசனின் புகழ்

எங்கும் பரவியது. வருவாயும் மிகுந்தது. எடிசன் பெருஞ்செல்வ ராஞர்; 1880-ல் மின்சார விளக்குக்-களைக் கண்டு பிடித்தார். அவைகளைக் காண மக்கள் திரள் திரளாகக் கூடினர். அவ்விளக்கு அவருக்குப் பெருஞ்செல்வத்தை வழங்குங் கற்பகத்தருவாய் அமைந்தது. அவர் 1882-ல் மின்ஞற்றலால் தொடர்-வண்டியை ஓட்டிஞர்; மின்சாரத்தின் உற்பத்திக்கு இன்றியமையாத 'டைனமோ' என்னும் பொறியைக் கண்டுபிடித்தார்.

எடிசன் 1895-இல் மண்கட்டிகளையும் கற்பாறை-களையும் உடைத்துத் தூளாக்கி, ஒரு நாளில் இரண்-டாயிரம் டன் நிறையுள்ள இரும்பிணைப் பிரித்தெடுக்-கும் ஓர் அற்புதப் பொறியைக் கண்டு பிடித்தார். அவர் திறமையைக் கண்டு உலகமெல்லாம் போற்-றிப் புகழ்ந்தது.

'நியூயர்ர்க்' மக்கள் எடிசனின் ஆராய்ச்சித் திறமையைக் கண்டு, அவருக்குப் பொற்பதக்கம் அளித்துப் பாராட்டினர். பல பல்கலைக் கழகங்கள் பட்டங்கள் வழங்கின. உலகம் போற்றும் விஞ்ஞானி எடிசன் 1931-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பருவுடலை நீத்துப் புகழுடலை அடைந்தார்.

"பிள்ளைகள், தாங்கள் ஏழைகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கவலை கொள்ளக்கூடாது. நன்கு கற்று அறிவையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். விடாது உழைத்தல் வேண்-டும். 'இவ்வேலையை நான் செய்து முடிப்பேன்'

என்ற தன்னம்பிக்கை யுள்ளவராகத் திகழ்தல் வேண்டும்; சோம்பேறிகளாக வாழக்கூடாது. உழைப்பால் உயர்நிலையை அடையலாம்'' என்பவை எடிசனுடைய வாழ்க்கையால் நாம் அறியும் உண்மைகளாகும்.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

வினுக்கள்

1. இளமையில் எடிசன் செய்த சேவை என்ன?
2. எடிசனுக்கு எப்போது காது செவிடாயிற்று? ஏன்?
3, எடிசன் தந்தியடிக்கக் கற்றது எப்படி?
4. எடிசன் கண்டுபிடித்த சில பொருள்களைக் கூறுக.
5. எடிசன் வாழ்விலிருந்து நாம் அறியும் எண்மை யாது?

---

# 20. வீரபாண்டிய கட்டபொம்மு

## (நாடகம்)

### காட்சி 1

**இடம்:** இராமநாதபுரம் அரண்மனை மெத்தை-வீடு.

**காலம்:** காலை பத்துமணி (1796 ஆகஸ்டு 10.)

**நாடகபாத்திரர்:** கலெக்டர், வீரபாண்டியக் கட்டபொம்மு, அவர் தம்பிமார், மந்திரி முதலியோர்.

**கலெக்டர்:** பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரே, வருக! எல்லோரும் நலந்தானே!

**வீரபாண்டியக் கட்டபொம்மு:** துரையவர்களே, வணக்கம். என் தாயாருக்கு உடல்நலன் குன்றி இருந்ததினால் தாமதம் ஏற்பட்டது; மன்னிக்கவேண்டும். இப்போது யாவரும் நலனே.

**கலெ.:** பாளையக்காரரே, பல ஆண்டுகளாகக் கிஸ்தி கட்டவில்லையே! இது நியாயமா?

**வீ. க.:** தொகை முழுவதையும் கொணர்ந்திருக்கின்றேன்.

**கலெ.:** சர்க்கார் கிராமங்களில் நீங்கள் குழப்பம் ஏற்படுத்திவருவதாகக் கேள்வியுறுகிறோமே.

**வீ. க.:** நான் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லையே! குடிமக்கள் அவ்விதம் ஏதாவது வாக்குமூலம் கொடுத்திருப்பதைக் காட்டுவீர்களாயின், அக்குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

**கலெ.:** நல்லது. கம்பெனியாரிடமிருந்து மறு உத்தரவு வரும்வரை, நீங்கள் இக் கோட்டைக்குள் தங்கியிருக்க வேண்டும்.

**வீ. க.:** (கலெக்டர்வஞ்சகத்தைக் கட்டபொம்மு உணர்ந்தார்.) தங்கள் கட்டளைப்படி தங்கியிருக்கத் தடை இல்லை. ஆனால், கோட்டைக்குள் வைசூரி பரவியிருக்கிறதாம். என் உடல்நிலை சரியாயில்லாததனால்,

வெளியே தங்கியிருக்க அநுமதி அளிக்க வேண்டும்.

**கலெ.:** சரி. நான் பல கடிதங்கள் எழுதினேனே; எனக்குப் பதில் ஒன்றும் வரவில்லையே!

**வீ, க.:** துரையவர்களே, எனக்கு வந்த கடிதங்களுள் உரியவற்றுக்குப் பதில் எழுதியுள்ளேன். மற்றவற்றுக்குப் பதில் அவசியமில்லை என்று எண்ணி எழுதாதிருந்திருப்பேன்.

**கலெ.:** ஜவால் நவீஸ், அவருக்கு எழுதிய கடிதங்களின் நகல்களைப் படித்துக்காட்டுங்கள்.

**ஐ. ந.:** (பலவற்றைப்படித்து, கடைசியாகப் படிக்கின்ருன்.) இவ்வருடம் மேமீ 13உ பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் உடனே இராமநாதபுரம் வந்து எம்மைப் பார்க்க வேண்டும்; வாராவிட்டால், பாளையம் பறிமுதல் செய்யப்படும்.

(கட்டபொம்முவுக்குக் கோபம் உண்டாயிற்று; கோபத்தை அடக்கிக்கொண்டு, அங்குத் தங்கக்கூடாது என்று உறுதிகொண்டார். மலஜலம் கழிக்கப் போவதாகக் கூறி, தம்மைச் சூழ்ந்து தடுத்த வீரரைத் தாக்கி அவ்வூரைவிட்டு வெளியேறித் தம் ஊரை அடைந்தார்.)

---

## காட்சி 2

**இடம்:** கயத்தாறு.

**காலம்:** 1796 அக்டோபர் 16உ பகல் 1-மணி.

**பாத்திரர்:** மேஜர் பானர்மன், கட்டபொம்மு, மற்றைப் பாளையக்காரர் முதலியோர்.

**பானர்மன்:** பாளையக்காரர்களே, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காராகிய வீரபாண்டியக் கட்டபொம்முபேரில் கம்பெனியார் சில குற்றஞ் சாட்டியுள்ளார்கள். அவற்றிற்குத் தக்க நீதி வழங்க, தீர்ப்பு அளிக்கும் பொழுது, நீங்களும் உடனிருக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

(கட்டபொம்மு கைதியாகக் கூட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்டார்.)

வீரபாண்டியரே! உம்மீது கூறப்படுங் குற்றங்களை வாசிக்கின்றேன். தக்க சமாதானம் கூறுவீராக. முதலாவதாக, நீர் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்திப் பணத்தைச் செலுத்தாமல், தொந்தரவு கொடுத்திருக்கிறீர்.

**வீ. க.:** கிஸ்திப்பணமா! வானம் பொழியுது, பூமி விளையுது. வாணிகம் செய்து பிழைக்க வந்த வஞ்ச வெள்ளைக் கம்பெனியாருக்கு வரிப்பணம் கட்டவேண்டுமா?

**பானர்.:** அப்படியா! கலெக்டர் உம்மைப் பேட்டி காணும்படி இட்ட ஆணைக்கு, பரிவாரம் இல்லாமல், தனியே வர மறுத்தீராமே, அது இரண்டாவது குற்றம்.

**வீ.க.:** பாளையக்காரர்கள் தனித்து வருவது பரம்பரை வழக்கத்துக்கு விரோதம். எங்கட்கு மானம் பெரிதேயன்றி, வாழ்வு பெரிதல்ல.

**பானர்:** ஆஹா! இப்பொழுது எங்கே அந்தமானம்?

**வீ.க.:** ஓஹோ! வெள்ளைவீரர்கள் கட்டபொம்முவைப் போரில் வென்று கைதியாக்கினர்களோ! நம்பினேரை மோசம் செய்து காட்டிக்கொடுத்த இந்தத் துரோகிகளின் உதவி யின்றி என்னைத் தீண்டவும் முடிந்திருக்குமோ?

**பானர்:** கம்பெனியாருடன் பகைத்து நின்ற சிவகிரிப் பாளையக்காரர் மகன், மருமகன் முதலியோருக்கு உதவிசெய்யப் பெரும் படை அனுப்பினது மூன்ருவது குற்றம்.

**வீ.க.:** ஆம். தந்தைக்கும் மகனுக்கும் உள்ள வேற்றுமையை அகற்றி ஒற்றுமைப் படுத்தவே என் கடமையைச் செய்தேன். அதிற் குற்றமில்லையே!

**பானர்:** கடைசிக் குற்றமாவது—உம்மை அடக்குவதற்கு அனுப்பிய கம்பெனியாரின் பட்டாளத்துடன் எதிர்த்துப் போர் செய்து, அப் படையை அழித்தது.

**வீ.க.:** ஆம், அது உண்மையே. உயிர் உள்ளவரை, எந்த வீரனும் மானமிழந்து அடிமையாக வாழமாட்டான். நீங்கள் கூறியவற்றுள் ஒன்றையும் நான் குற்றமாகக் கருதவில்லை.

**பாளர் :** நீர் செய்த குற்றங்களுக்காக, உமக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்.

**வீ.க.:** உமது தண்டனை உடலைத்தான் அழிக்கும்; என் மானத்தை அழிக்குமா? இல்லை; மானத்தை உயர்த்தும். முருகனையும் சக்கதேவியையும் வணங்கித் துதித்த யாம் அற்ப வெள்ளையரை வணங்கி வாழ்த்துவோமா? ஒருகாலும் இல்லை.

**பானர் :** கொலையாளிகளே, கோட்டைக்கு வெளியே நிற்கும் கட்டைப் புளியமரத்தில் இவனைத் தூக்கிலிடுங்கள்.

(கட்டபொம்மு ஒருவிதக் கலக்கமும் நடுக்கமும் இல்லாமல் கம்பீரமாகத் தூக்குமேடைக்குச் சென்று, புளியமரத்தின் அடியில் நின்றார்.)

## காட்சி 3

**வீ.க.:** வடிவேல் முருகா! சக்கதேவி! நான் மரணத்துக்கு அஞ்சவில்லை; போர்க்களத்தில் விழுப்புண் பட்டு இறக்கவில்லையே என்று என் மனம் வருந்துகிறது. உங்கள் அடிகளை விரைவில் அடைகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(கட்டபொம்மு தூக்கிலிடப்பட்டார்.)

# I. கடவுள் வாழ்த்து

## 1. தேவாரம்

நெஞ்சே நீநினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

## 2. திருவாசகம்

அறிவனே! அமுதே! அடி நாயினேன்
அறிவன் ஆகக் கொண்டோ எனை ஆண்டதும் ?
அறிவு இலாமை அன்றே கண்டது ஆண்டநாள் ?
அறிவனோ, அல்லனோ ? அருள் ஈசனே !

## 3. திவ்வியப் பிரபந்தம்

கூவாய் பூங்குயிலே—குளிர்
மாரி தடுத்துகந்த
மாவாய் கீண்ட மணிவண்ணனை வரக்
கூவாய் பூங்குயிலே.

## 4. சீறாப்புராணம்

சிறந்த மெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

## 5. தேம்பாவணி

அறந்தாய் தந்தை சுற்றமு மற்
றனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிரன்னேய்
பிறந்தெந் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தாய் இவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ.

---

# II. அறவுரைப்பகுதி

## 1. திருக்குறள்

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 1
நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 2
ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 3
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 4
தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 5
ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 6
புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 7

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 8
எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 8
அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 10

---

## 2. நீதி வெண்பா

### விலகிப்போதல்

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (1)

### குணத்தைக்கொண்டு அறிக

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். (2)

### உருவத்தால் அறியலாகாது

வாக்குநயத் தால்ன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (3)

### நல்லார் இயல்

எல்லார் தமக்கும் இனிதுதவ லன்றியே
நல்லார் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேகம் நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று. (4)

**கற்றவர் சிறப்பு**

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு. (5)

---

## 3. அறநெறிச்சாரம்

கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லை மற் றென்றும் அறனுணர்தல்—நல்லாய்!
நறுநெய் நிறைய முகப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரு மாறு? (1)

வைகலும் நீருள் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் அஃதேபோல்
வைகலும் நல்லறங் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்என்னும் நெஞ்சு. (2)

ஒருநாளும் நீ தரியாய் உண்ணென்று சொல்லி
இருநாளைக் கீந்தாலும் ஏலாய்!—திருவாளா!
உன்னோ டுறுதி பெரிதெனினும் இவ்வுடம்பே
நின்னோடு வாழ்தல் அரிது. (3)

மக்க ளுடம்பு பெறற்கரிது; பெற்றபின்
மக்க ளறிவும் அறிவரிது—மக்கள்
அறிவ தறிந்தார் அறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார். (4)

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (5)

## 4. ஆசாரக்கோவை

வைகறை யாமம் துயிலெழுந்து தாஞ்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர். 2

உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார்—விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை. 3

காலினீர் நீங்காமை உண்டிடுக; பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
பேரறி வாளர் துணிபு. 4

கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண். 5

கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந்தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி. 6

---

## III. கதைப்பகுதி

### குறுமுயல் சிங்கத்தைக் கொன்றது

1. குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதுண் டதனைச் சொல்வேன்

செறியும்ஓர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி,

2. 'ஆணிளஞ் சிங்க மே, உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினம்ஒன் றுக
ஊணுனக் களிப்போம்' என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய்
அருந்திஅங் கிருக்கும் நாளில்,

3. தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
'இனி அது விடாது நம்மை
எனினும் ஓர் எடுப்பெ டுத்து
வினையை இப் போதுசெய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்கும் நற் புகழ் உண்' டென்றே,

4. கருதி அச் சிங்கத் தின் தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன் 'என் பசிவே ளைக்குப்

பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் உரைநீ' என்று
மனந்தனில் சினந்து கூற,

5. 'ஐய, உன் பசிவே ளைக்கிங்
கடியனேன் வந்தேன் அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமி' என்றிறைஞ்சி நிற்க,

6. சிங்கம் 'நாம் அல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்ட வா' என்
றழைத்தலும் அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்க்க,
அதனில்தன் உருவம் தோன்ற,

7. தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே செத்த தன்றோ ?
மன்னிய பகையா னாலும்
மதியினால் வெல்ல லாகும்
என்னுமோர் அரிய நீதி
இக்கதை விளக்கு மன்றே.

## IV. பல்சுவைப் பகுதி

### ஒற்றுமையின் உயிர்நிலை

ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரியவேண்டாம்—இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம்.
வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ.
மானமே வாழ்வின் உயிர்நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈனஜாதியெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ.
மன்னுயிர்க் காக முயல்பவரே—இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா!

—கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை

### பாரதியார் பாடல்

உடன்பிறந் தவர்களைப் போலே—இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்
திடங்கொண் டவர் மெலிந் தோரை—இங்குத்
தின்று பிழைத்திட லாமோ.
அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்.
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வமெல் லாரையும் வாழ்த்தும்.

146926

386

எஸ். வாஸன் கம்பெனி
35, ராக்கியப்ப முதலித் தெரு,
மயிலாப்பூர் :: மதராஸ்-4.